பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 01 திங்கட்கிழமை 16.11.2020 கதிர் 11

### இது ரகசியம் அல்ல!

*'தமிழர்களின் அரசியல் தீர்வுக்காகச் செயற்படுவதற்கு ஜஸ்மின் சூகா, நவநீதம்பிள்ளை ஆகியோரை உள்ளடக்கி விரைவில் உதயமாகின்றது தமிழர் தேசிய சபை. உறுதிப்படுத்தினார் மாவை'* – என்ற செய்தியை ஒட்டி என் கருத்தை நேற்று பக்கம் 02 »

## 17 ஆயிரத்தைக் கடந்தது தொற்றாளர்கள் எண்ணிக்கை; நேற்று மட்டும் 704 கொரோனா நோயாளிகள் அடையாளம்

இலங்கையில் நேற்று மாத்திரம் 704 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் பேலியகொடை கொத்தணிப் பரவல் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 287 உயர்வடைந்துள்ளது.

5 ஆயிரத்து 734 தொற்றாளர்கள் தற்போது நாடு முழுவதும் உள்ள கொரோனாத் தொற்றுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பக்கம் 02 »

# 'கொரோனா' ஊழித் தாண்டவம் 24 நாள்களில் 45 பேர் மரணம்!

## நேற்றும் 5 பேர் பரிதாபச் சாவு

கொழும்பு, நவம்பர் 16

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 5 ஆண்களே நேற்று உயிரிழந்துள்ளனர். இவர்களில் மூவர் 60 வயதைத்தாண்டியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 58ஆக அதிகரித்துள்ளது. பக்கம் 02 »

## புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறு நேற்று வெளியீடு

இலங்கையில் இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளன.

பெறுபேறுகளை http://www.doenets.lk அல்லது http://www.results.exams.gov.lk//viewresultsforexam.htm என்ற முகவரியில் பார்வையிடலாம் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

## புதிய தேர்தல் ஆணையம் ஜனாதிபதியால் நியமனம்

புதிய தேர்தல் ஆணையத்தை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நியமித்திருக்கின்றார் என அறியவருகின்றது.

சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவ தேர்தல் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் திணைக்களத்தில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வுபெற்ற எம்.எம். முஹமட், மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தில் பணியாற்றிய ஜீவன் தியாகராஜா, எஸ்.சமதிவகார, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கே.பி.பி.பத்திரன ஆகியோர் ஆணையத்தின் மற்றைய நான்கு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என அறியவருகின்றது.

## மாவட்ட ரீதியில் வெட்டுப்புள்ளி விவரம் யாழ்.,கிளிநொச்சி,வவுனியா - 160

2020ஆம் ஆண்டுக்கான தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாவட்ட மட்ட வெட்டுப்புள்ளிகள் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் தமிழ்மொழிமூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு 160 புள்ளிகளும், மன்னார் பக்கம் 02 »

## ஆணைக்குழு உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் நியமனம்

இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி பல்வேறு ஆணைக்குழுக்களுக்கும் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்து வருகின்றார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். பக்கம் 02 »

## வவுனியா மாணவியும், முல்லை மாணவனும் 196 புள்ளிகளுடன் வடக்கில் முன்னிலையில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.16

நேற்று இரவு வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர்கல்லூரி மாணவி ஒருவரும், முல்லைத்தீவு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவன் ஒருவரும் தலா 196 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளனர்.

மாகாணத்தில் நேற்று நள்ளிரவு வரை வெளிவந்த புள்ளிப் பெறுபேறுகள் பற்றிய தகவல்களின்படி வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவி அஸ்வினியா ஜெயந்தன் 196 புள்ளகளைப் பெற்றுள்ளார்.

முல்லைத்தீவு பக்கம் 02 »

## மற்றுமொரு பிரதேசம் முடக்கம்

களுத்துறை மாவட்டத்தில் போத்துவாவத்த பிரதேசம் முடக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்குக் கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அந்தப் பகுதி நேற்று முதல் முடக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி தெரிவித்தார்.

குறித்த வர்த்தக நிலையத்துக்கு வந்து சென்றவர்கள், வர்த்தகருடன் தொடர்பைப் பேணியவர்கள் எனப் பலர் அப்பிரதேசத்தில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

## பொஸ்கோ, யாழ்.இந்து முன்னிலை

யாழ்ப்பாணம், நவ.16

யாழ்.மாவட்டத்தில் வழமைபோல இம்முறையும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் புனித பொஸ்கோ ஆரம்ப பாடசாலை மற்றும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியன முன்னிலை பெற்றுள்ளன.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் 232 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். 149 பேர் சித்தியடைந்தனர்.

பொஸ்கோவில் கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் தோற்றினர். 159 பேர் சித்தியடைந்தனர்.

இரு பாடசாலைகளிலும் ஒவ்வொரு மாணவர்கள் 195 புள்ளிகள் பெற்று முன்னிலை அடைந்துள்ளனர். (உ)

## தீபாவளிக்கென நான்கு வாகனங்களில் வந்த வெடிகள் திருப்பியனுப்பப்பட்டன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீபாவளிப் பண்டிகைக்கு தெற்கில் இருந்து நான்கு 'படி' வாகனங்களில் கொண்டு வரப்பட்ட வெடிகள் சுகாதார அதிகாரிகளினால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தெற்கில் இருந்து கொரோனா காலத்தில் வருபவர்களைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சுகாதார அதிகாரிகளுக்கு கடந்த 12ஆம் திகதி இரவு தகவல் ஒன்று பக்கம் 02 »

## பிரதான பி.சி.ஆர். இயந்திரத்தில் கோளாறு இல்லை என்கிறது சீனா

கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் காணப்படும் பிரதான பி.சி.ஆர். இயந்திரத்தில் தொழிநுட்பக் கோளாறு எதுவும் கிடையாது என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே இந்த விடயம் பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

ஏனைய முக்கிய தரப்புகளுடன் பேசாமல் மாவை தன்பாட்டில் விடுத்த இந்த முன்னறிவிப்பு – இந்த நகர்த்தல் – பல தாக்கங்களைத் தரக் கூடியது என்று நேற்று என் பத்தியின் முடிவில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

அதற்குள் இறங்க முன்னர் ஒரு 'ப்ளாஷ் பாக்'. அப்படி ஒன்றும் நீண்ட காலத்துக்கு முன்னர் நடந்தவிடயமல்ல இது. கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவகாரம்.

இருபதாவது திருத்தம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடந்து கொண்டிருந்தது. அதைப் பார்வையிடுவதற்காக நாடாளுமன்றத் தொகுதிக்கு வந்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமது அறையில் அமர்ந்திருந்தபடி தொலைக்காட்சி ஊடாக நாடாளுமன்ற அமர்வுகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் அப்போது தான் நாடாளுமன்றுக்கு நுழைந்திருந்த இளைஞர் சாணக்கியன் எழுந்து மூன்று மொழிகளிலும் சரளமாக வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார்.

இந்தத் தடவை முதல் முறையாக மட்டக்களப்பில் இருந்து நாடாளுமன்றுக்குள் நுழைந்த பின்னர்தான் முப்பது வயதை எட்டினார் அவர்.

அவரது உரை முடிந்ததும், நாடாளுமன்ற அலுவலர் ஒருவர் மூலம் சாணக்கியனுக்கு ஒரு செய்தி சொல்லப்பட்டது. நாடாளுமன்றில் தமது அறையில் தம்மை வந்து சந்திக்கும்படி சாணக்கியனுக்குத் தகவல் அனுப்பியிருந்தார் ஜனாதிபதி.

செய்தி கேள்விப்பட்டதும் சாணக்கியன் பதறியடித்துக் கொண்டு சுமந்திரனிடம் போய்த் தகவலைக் கூறியிருக்கின்றார். சிரித்த சுமந்திரன், *'போய் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுங்கள். அவர் என்ன சொல்கின்றார் என்று பார்ப்போமே!'* – என்று சாணக்கியனை வழிப்படுத்தினார்.

மிக அந்நியோன்னியமாக சாணக்கியனை வரவேற்றார் ஜனாதிபதி. தமது சோபா செட்டில் தமக்கு அருகே சாணக்கியனை அமர்த்தி அவருடன் பேசினார்.

கண்டியில் சாணக்கியன் கல்வி கற்ற பாடசாலை பற்றி எல்லாம் அறிந்து கொண்ட ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, சிங்கள மொழி மூலத்தில் படித்த தமிழர் என்று அறிந்து சாணக்கியனைப் பாராட்டினார். கடைசியில் உரிமையோடு ஒரு விடயத்தைச் சொன்னார்.

*"தம்பி நீங்கள் பேசுவது, ஆர்ப்பாட்டம் நடத்துவது, போராட்டம் செய்வதெல்லாம் சரி. இங்கு (நாடாளுமன்றத்தில்) நீங்கள் அதிகம் சத்தம் போட்டும் பயனில்லை. கடைசியில் எங்களுடன்தான் பேசி முடிவு காண வேண்டும். அங்கிருந்து சத்தம் போட்டு, ஆரவாரம் பண்ணி, போராட்டங்களை நடத்துவதை விடுத்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எங்களுடன் பேசுவது தான் வழி. அதற்கு வாருங்கள். உங்கள் தலைவர்களையும் அழைத்து வாருங்கள். பேசித் தீர்ப்போம்."* – என்று சாரப்பட ஓர் ஆலோசனையையும் கூறி சாணக்கியனை அனுப்பி வைத்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

விக்கித்துப்போன சாணக்கியன், அந்த விவரத்துடன் மீண்டும் சுமந்திரனிடம் வந்தார்.

"இன்று ஜனாதிபதி கோட்டாபய நாடாளுமன்றத்தில் ப்ரீயாகத்தான் இருக்கின்றார். வாங்கள் போய் பேச்சை ஆரம்பிக்கலாம்" என்ற சாரப்பட இருந்தது சாணக்கியனின் பேச்சு.

*"இல்லை. பேச்சு என்றால் உரிய முறையில் அழைப்பு வரவேண்டும். நாங்கள் கூட்டமைப்புக்குள் சம்பந்தன் ஐயாவோடு கலந்துரையாடித் தீர்மானம் எடுத்து விட்டுத்தான் அவரிடம் (ஜனாதிபதி கோட்டபாயவிடம்) போக வேண்டும். எனவே அவசரப்பட வேண்டாம்."* – என்று ஆலோசனை கூறி விடயத்தை தற்காலிகமாகத் தள்ளிப் போட்டிருக்கின்றார் சுமந்திரன்.

இனி விடயத்துக்கு வருவோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோடு இனி ஊடாடி முயற்சிப்பதா, இல்லை முறித்துக்கொண்டு அடுத்த கட்டத்துக்குப் போவதா என்பதைத் தமிழர் தலைமை தான் தீர்மானிக்க வேண்டும்.

இலங்கை அரசுடன் ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் முரண்பட்டு மோதுவது வேறு விடயம். அது கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நீடிக்கும் தொடர்கதை.

அதற்கு அப்பால், சர்வதேச தரப்புகளையும் சேர்த்துக் கொண்டு, முழுப் புலம் பெயர் அமைப்புகளையும் உள் வாங்கி, சர்வதேச ரீதியில் 'தமிழர் தேசிய சபை' ஒன்றைத் தமிழர்கள் உருவாக்குவது என்பது கோட்டா அரசுடன் சமரச முயற்சிகளை முடித்து கொண்டு, முழு மோதல் நிலைக்குத் திரும்புவதற்கு ஒப்பானதாகும்.

கோட்டா அரசுடன் பேச்சுக் கதவைத் திறக்காமல் நேரடியாக சர்வதேசத் தரப்புகளை அரவணைத்து இராஜதந்திர மோதல் செய்வதுதான் தீர்மானம் என்றால் அதை முன்னெடுப்பதில் தவறு இல்லை. ஆனால் அதைச் செய்ய முதல் அது குறித்து தமிழர் தரப்புகள் தங்களுக்குள் பேசித் தீர்மானிக்க வேண்டும். புலம்பெயர் தேசத்தில் செயற்படும் வலுவான தமிழர் தரப்புகளுடன் விவரிவாகக் கலந்துரையாடல் செய்ய வேண்டும்.

அதை எல்லாம் செய்யாமல் – குறைந்த பட்சம் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தனக்குப் பக்கத்தில் இருக்கு தரப்புகளுடன் கூடப் பேசாமல் – தன்பாட்டில் மாவை சேனாதிராசா இப்படி அறிவிப்பது, நான் நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டமை போல வெறுமனே முன்னர் அடிக்கடி அவர் விடுக்கும் 'போராட்டம் வெடிக்கும்', 'போராட்டம் வெடிக்கும்' அறிவிப்பு நாடகம் போன்றதுதான்.

ஆனால் இன்று அவர் இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் பதவியைத் தக்க வைத்துக் கொண்டு, எந்த ஆயத்தமும், தயார்ப்படுத்தலும், முன்னேற்பாடும் இல்லாமல் இப்படி 'தமிழர் தேசிய சபை'யை ஐ.நாவின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர்களையும் இணைத்துக் கொண்டு உருவாக்கப் போகிறோம் என்று ஆர்ப்பரிப்பது, எதிரியைத் தேவை இல்லாமல் உசுப்பி விடும் வேலையை ஒத்தது.

இப்படி அரசை உசுப்பேற்றும் தேவையில்லாத வேலையை மாவையர் அவசரப்பட்டு செய்திருக்கத் தேவை இல்லை. தவிர்த்திருக்கலாம்.

இதற்கிடையில் –

மாவையின் இந்த அறிவிப்பை ஒட்டி, அப்படி ஒரு ஏற்பாட்டில் யஸ்மின் சூகா சம்பந்தப்பட்டிருக்கின்றாரா என்ற கேள்விக்கு, அவரின் 'உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம்' எனும் அமைப்பு *'அது உண்மையல்ல'* என்று ருவிட்டரில் பதில் தந்திருக்கின்றது.

இவ்வாறு விடயம் ஆக முன்னரே தம் பட்டம் அடிக்கும் பேச்சை ஆரவாரத்துக்குப் பேசுவது மாவையின் பண்பியல்புதான்.

போராட்ட ஆரம்ப காலத்தில், பல இயக்கத் தலைவர்களும் கூடிய 'கொண்டலடி வைரவர் கோவில் கூட்டம்' குறித்து மாவை பேசப்போய், அதற்காக அவர் 'உள்ளே' வைத்து விசாரிக்கப்பட்ட விதம் குறித்தும், அவரது வாக்குமூலமே பல விடயங்களில் பாதிப்புகள் ஏற்படக் காரணமாக அமைந்தது என்பது பற்றியும் வெளிநாட்டில் இருந்து பழைய போராட்டப் பிரமுகர் ஒருவர் விவரித்தார். வீண் சர்ச்சை ஒன்றை ஆரம்பிக்க வேண்டாம் என்பதால் அது பற்றிய விடயத்தை இத்துடன் சுருக்கி விடுகிறேன்.

எது, எப்படி என்றாலும் ஒன்று மட்டும் நிச்சயம்.

தன்னுடைய கட்சியோடோ, பிற தலைவர்களோடோ கலந்துரையாடக் கூட இல்லாமல் இப்படி அரசியல் அதிர்வேட்டுக்களுக்காக வெற்று வேட்டுக்களைத் தீர்ப்பது பொல்லைக் கொடுத்து அடி வேண்டும் வேலையாகத்தான் முடியும்.

பாவம் தமிழினம்...!

– மின்னல் –

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லஞ்சம், ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் ஈவா வனசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக இலங்கையின் முன்னாள் தூதுவரும் சட்டதரணியுமான சரத் விஜேசிங்க பெயரிடப்பட்டுள்ளார். அதன் ஓர் உறுப்பினராக ஹர் குமார நவரட்ண நியமனமாகின்றார்.

முன்னாள் அமைச்சரவைச் செயலாளர் சுமித் அபேசிங்க நிதி ஆணைக்குழுவின் தலைவராகின்றார்.

காணாமல்போனோருக்கான ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேரட்ணவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற மஹிந்த தேசப்பிரிய எல்லை மீள்நிர்ணய ஆணைக்குழுவின் தலைவராகின்றார்.

ஓய்வுபெற்ற நீதியரசர் ஜகத் பாலபட்டபெண்டியும் ஓர் ஆணைக்குழுவுக்கு நியமனம் பெறுகின்றார் எனத் தெரிகின்றது.

## வவுனியா மாணவியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவன் முரளீதரன் அஸ்வினும் 196 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இதேநேரம், யாழ்ப்பாணத்தில், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் சந்திரகுமார் ஆர்வலன் மற்றும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் மகிசன் ஆகிய இருவரும் தலா 195 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இதேநேரம் யாழ் பொஸ்கோ ஆரம்ப பாடசாலையிலும் ஒரு மாணவன் 195 புள்ளிகளைப் பெற்றுள்ளார் எனக் கூறப்பட்டது. எனினும் அவரின் பெயர் விவரம் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிட்டவில்லை.

கிளிநொச்சியில் தர்மபுரம் இல.1 அ.த.க.பாடசாலை மாணவன் ரவீந்திரன் நிதுசன் 195 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

தமிழில் தேசிய ரீதியில் புத்தளம் சகிரா கல்லூரி மாணவி 199 புள்ளிகளுடன் முதலிடத்திலும் சிங்கள மொழியில் மூன்று மாணவிகள் 200 புள்ளிகளுடன் முதலிடத்திலும் உள்ளனர்.

## மாவட்ட ரீதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்டத்துக்கு 158 புள்ளிகளும், திருகோணமலை மாவட்டத்துக்கு 159 புள்ளிகளும், கொழும்பு மாவட்டத்துக்கு 162 புள்ளிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பரீட்சையின் வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் மாவட்டங்களின் விவரம் வருமாறு:-

**162 புள்ளிகள்**

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகல், கேகாலை.

**160 புள்ளிகள்**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, ஹம்பாந்தோட்டை.

**159 புள்ளிகள்**

திருகோணமலை, பதுளை, பொலனறுவை.

**158 புள்ளிகள்**

நுவரெலியா, மன்னார், இரத்தினபுரி, அநுராதபுரம்.

**155புள்ளிகள்**

புத்தளம், மொனராகலை.

## பிரதான பி.சி.ஆர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் காணப்படும் பி.சி.ஆர். இயந்திரம் செயலிழந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பரிசோதனை இயந்திரத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளமையினாலேயே இயந்திரத்தின் செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், புதிய பி.சி.ஆர். இயந்திரத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், இன்னும் 3 அல்லது 4 நாள்களில் அதனை நாட்டுக்குக் கொண்டுவர எதிர்பார்க்கப்பட்டுள்ளது எனவும் இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## 17 ஆயிரத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நாட்டில் மேலும் 171 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 11 ஆயிரத்து 495 பேர் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 562 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 58 ஆக உயர்வடைந்துள்ளது.

## 'கொரோனா' ஊழி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று சாவடைந்தோர் குறிப்பு வருமாறு:-

1. கொழும்பு 13, ஜிந்துபிட்டிய பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய ஆணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார். நீண்டகாலம் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த இவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியமையே மரணத்துக்குக் காரணம்.

2.கொழும்பு 15 ஐச் சேர்ந்த 39 வயதுடைய ஆணொருவர் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதையடுத்து ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இவருக்கு கொரோனாத் தாக்கத்தால் ஏற்பட்ட நிமோனியாவே மரணத்துக்குக் காரணம்.

3.கொழும்பு 12 ஐச் சேர்ந்த 88 வயதுடைய ஆணொருவர் உயிரிழந்துள்ளார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளையிலேயே அவர் உயிரிழந்தார். இருதய நோயால் பாதிக்கப்பட்ட அவருக்குக் கொரோனாத் தாக்கமும் ஏற்பட்டதாலேயே உயிரிழந்துள்ளார்.

4.கொழும்பு 8, பொரளைப் பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய ஆணொருவர் வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

5.கொழும்பு 13 ஐச் சேர்ந்த 88 வயதுடைய ஆணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் வேளையில் உயிரிழந்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றையடுத்து ஏற்பட்ட இருதய நோயாலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் கடந்த 24 நாள்களில் மாத்திரம் 45 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் 22 வரையான சுமார் 8 மாத காலப்பகுதியில் கொரோனாவால் 13 பேரே உயிரிழந்திருந்தனர். 31 ஆம் திகதியாகும்போது மரண எண்ணிக்கை 20 ஆக அதிகரித்தது.

எனினும், கடந்துள்ள 15 நாள்களில் மாத்திரம் 38 பேர் உயிரிழந்துள்ளனர். நாளாந்தம் கொரோனா மரணங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. உயிரிழந்தவர்களில் 90 வீதமானோர் 60 வயதைக் கடந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி 8 ஆம் பக்கத்தில்)

## தீபாவளிக்கென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடைத்தது. தீபாவளிப் பண்டிகைக்காக 13ஆம் திகதி யாழ்.நகரில் விற்பனை செய்வதற்காக 4 வாகனங்களில் வெடி எடுத்து வந்த பலர் ஓர் விடுதியில் தங்கி நிற்கின்றனர் எனக் கூறப்பட்டது.

இந்த தகவலின் அடிப்படையில் சோதனையில் ஈடுபட்ட அதிகாரிகள் 4 வாகனங்களில் வெடி எடுத்து வந்தவர்களை இனம் கண்டு அவர்களை உடனடியாக 14 நாள்கள் தனிமைப்படுத்தல் உத்தரவை வழங்கினர். அதனால் மறுநாள் வெடிகள் விற்பனைக்கு விடப்படவில்லை.

இவ்வாறு வெடியும் விற்பனை செய்யப்படாமல் வாகனங்களும் நீண்ட நாள்களாக தடுக்கப்பட்டு, வந்தவர்களும் யாழில் தடுனிமைப்படுத்தலில் இருப்பதனால் ஏற்படும் இடரும், நெருக்கடியும் சுட்டிக்காட்டப்பட்டன. அதனால் நேற்று மாலை வெடி ஏற்றி வந்த வாகனங்களுடன் வந்தவர்களும் மீண்டும் தெற்கிற்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

# நாட்டு மக்களுக்கு கொரோனாவிலிருந்து ஆசி வேண்டி மகாசங்கம் பிரார்த்தனை





கொழும்பு, நவ.16
நாட்டு மக்கள் அனைவருக்கும், நாட்டின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஆசி வேண்டி 500 மகா சங்கத்தினர் பங்கேற்ற பிரித் பாராயண நிகழ்வொன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மிரிஸவெடிய புன்னியபூமியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

நாட்டு மக்களும் உலக வாழ் அனைத்து மக்களும் முகம்கொடுத்துள்ள கொரோனா நோய்த்தொற்றிலிருந்து விடுபடுவதற்கு ஆசீர்வாதம் வேண்டியும், ஜனாதிபதியாக கோட்டாபய பொறுப்பேற்று ஒரு வருடம் நிறைவடைவதை முன்னிட்டும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டும் இந்த வழிபாட்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சியம் நிகாயவின் மல்வத்தை பிரிவின் வட மத்திய மாகாண தலைமை சங்கநாயக்கர் அடமஸ்தானாதிபதி சங்கைக்குரிய பல்லேகம சிறிநிவாச நாயக்க தேரரின் ஆலோசனையின் பேரில், மிரிஸவெடிய, சைத்தியாதிகாரி சங்கைக்குரிய ஈதலவெடுனு வெவே ஞானதிலக தேரரின் நெறிப்படுத்தலில், மல்வத்தை பிரிவின் அநுனாயக தேரர் சங்கைக்குரிய திம்புல்கும்புரே விமலதர்ம நாயக்க தேரரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் - நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த 500 மகா சங்கத்தினர் பங்குபற்றினர்.

பிரதமரும் ஜனாதிபதியும் இதன்போது துட்டகைமுனு மன்னரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

பிரித் பாராயணத்தைத் தொடர்ந்து மல்வத்தை, அஸ்கிரிய அநுனாயக தேரர்கள், அடமஸ்தானாதிபதி உள்ளிட்ட மகா சங்கத்தினர் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் நினைவுச்சின்னங்களை வழங்கிவைத்தனர்.

மகா சங்கத்தினருக்கு பூஜைப்பொருள்களை ஜனாதிபதியும், பிரதமரும் வழங்கிவைத்தனர்.

மக்கள் பிரதிநிதிகள், அமைச்சுக்களின் செயலாளர்கள், பாதுகாப்பு பணிக்குழாம் பிரதானி, முப்படைகளின் தளபதிகள், பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்புத் துறை முக்கியஸ்தர்களும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

# செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு பக்தர்கள் உள்நுழையத் தடை!




வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்குள் பக்தர்கள் உள்நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கந்தசஷ்டி விரதத்தின் ஆரம்ப நாளான நேற்று பெருமளவான அடியார்கள் ஆலயத்துக்குச் சென்றிருந்த போதும் வெளி வீதியில் வைத்தே சந்நிதியானைத் தரிசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆலய வெளி வீதிக்குள் செல்லும் அடியார்களில் ஐந்து நபர்கள் மாத்திரம் உள்நுழைய அனுமதித்து, பின்பு உள்நுழைந்த அடியார்கள் வெளியில் வந்ததும் வேறு ஐந்து நபர்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று அச்சநிலை காரணமாகச் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே இவ்வாறான நடைமுறை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய வளாகத்தில் காவல்துறையினர் மற்றும் சுகாதாரத் துறையினர் கடமையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 200 துறைமுக ஊழியர்கள் தனிமைப்படுத்தலில் உள்ளனர்!

கொழும்பு துறைமுகத்தில் சுமார் 200 ஊழியர்கள் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 61 துறைமுக ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என இலங்கை துறைமுக ஆணையத்தின் தலைவர் ஓய்வு பெற்ற ஜெனரல் தயாரத்நாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களே அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை 106 ஊழியர்கள் தங்களது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து, அவர்கள் வெளியேறியுள்ளனர் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# மேலும் 4 கொரோனா சிகிச்சை நிலையங்கள் கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளன!

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொரோனாத் தொற்றாளர்களை சிகிச்சையளிப்பதற்கென கிழக்கு மாகாணத்தில் மேலும் நான்கு வைத்தியசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன எனவும் இதுவரை கிழக்கு மாகாணத்தில் 119 கொரோ தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடைய கொவிட் - 19 தொற்றாளர்கள் கிழக்கு மாகாணத்தில் அடையாளப்படுத்தப்பட்டு வரும் இந்தக் கால கட்டத்தில் இந்த நோயாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் வகையில் இவ்வாறு புதிதாக நான்கு கொரோனா சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் கொவிட் - 19 தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு ஏற்கனவே ஐந்து வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றோடு புதிதாக மேலும் நான்கு வைத்தியசாலைகள் கொவிட் - 19 சிகிச்சைக்காக தயார் படுத்தப்பட்டமையையடுத்து கிழக்கு மாகாணத்தில் ஒன்பது வைத்தியசாலைகளில் இந்தச் சிகிச்சைக்காக இயங்கவுள்ளன.

இதற்கமைவாக, திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச வைத்தியசாலை, மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியகல்லாறு பிரதேச வைத்தியசாலை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள மருதமுனை பிரதேச வைத்தியசாலை மற்றும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அதிகார எல்லைக் குட்பட்ட தமண பிரதேச வைத்தியசாலை ஆகியன புதிதாக கொரோனா சிகிச்சை நிலையங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையங்கள் மூலம் 450 கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேலியகொட கொத்தணியுடன் தொடர்புபட்டவர்கள் என அடையாளப் படுத்தப்பட்ட 5 ஆயிரத்து 400 பேருக்கு இதுவரை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், கிழக்கு மாகாணத்தில் தற்போது 1,904 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் லதாகரன் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையங்கள் மூலம் இதுவரை 731 நோயாளர்களுக்கு வெற்றிகரமான சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதோடு, தற்போது 135 பேர் சிகிச்சை பெற்றும் வருகின்றனர் எனவும் நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாணத்தில் புதிதாக இருவருக்கு கொவிட் - 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அம்பாறை தமண மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.லதாகரன் மேலும் தெரிவித்தார்.

கந்தசஷ்டி சிறப்பம்சம்



நிம்மதி நிறையும் வாழ்வில்!

சஷ்டியை நோற்று நின்றால்
சங்கடம் அகன்றே ஓடும்
துஷ்டரும் பக்கம் வாரார்
துன்மதி தொலைந்தே போகும்
இஷ்டங்கள் இணைந்தே வாழ்வில்
இல்லமும் சிறந்தே ஓங்கும்
நிஷ்டையும் அமைந்தே நிற்கும்
நிம்மதி நிறையும் வாழ்வில்!

ஓடிடும் மனமே நில்லு
ஒருதரம் முருகன் நாமம்
நாடியே நவின்று பாரு
நமனுமே அஞ்சி நிற்பான்
வாடிடும் நிலையும் போகும்
வளமெலாம் வந்து சேரும்
நீடிடும் வாழ்வும் கிட்டும்
நினைத்திடு முருகன் நாமம்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், அவுஸ்திரேலியா.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொப்பி தினமும் மாவீரர் நாளும்

**உலகம் முழுவதும் யுத்தத்தினால் மரணித்தவர்களை நினைவு கூரும் காலம் இந்த நவம்பர் – கார்த்திகை – மாதம்தான்.**

**உலகத்தில் போர்களில் கொல்லப்பட்ட வீரர்களை நினைவு கூரும் தினம் நவம்பர் 11ஆம் திகதி.**

**முதலாம் உலகப் போரை ஒட்டிய மோதல் தவிர்ப்புக்கான இணக்கம் 1919இல் பதினோராவது மாதம் 'பதினோராவது நாள்' பதினொரு மணிக்கு சம்பிரதாய பூர்வமாக நடைமுறைக்கு வந்த பின்னர், அதை ஒட்டி இந்த பொப்பி மலர் தினம் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.**

**முதலாவது உலக மகா யுத்தம் 1919 ஜூன் 28ஆம் திகதி முடிவுக்கு வந்ததாயினும், மோதல் முரணிலை சம்பிரதாய பூர்வமாக பின்னர்தான் நடைமுறைக்கு வந்ததாகக் கூறப்படுகின்றது.**

**இந்தத் தினம் விசேடமாக பிரிட்டிஷ் கெலனித்துவ ஆட்சி நிலவிய இலங்கை போன்ற பொதுநலவாய நாடுகளிலேயே சிறப்பாகக் கைக் கொள்ளப்படுகின்றது.**

**இந்தத் தினத்தில் உலகெங்கும், யுத்த வீரர்களை கௌரவிக்கும் பொப்பி மலர்கள் விற்கப்படுகின்றன. அதன் மூலம் வரும் நிதி, யுத்தத்தில் வீழ்ந்த வீரர்களின் குடும்பத்தவர்களினதும், யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தவர்களினும் சேமநலனுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.**

**அந்த வகையில் கடந்த 11ஆம் திகதியும் இலங்கையில் பொப்பி மலர் விற்பனை இடம்பெற்றது. தென்னிலங்கையில் வழமை போல அது முன்னெடுக்கப்பட்டது. இலங்கை படை வீரர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பொப்பி மலர்களை அணிவித்தனர்.**

**இலங்கையில் அது, இங்கு யுத்தத்தில் மாண்ட படையினருக்கு மரியாதை செய்யும் நிகழ்வாகவே பார்க்கப்படுகின்றது.**

**அந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட யுத்தத்தில் உயிரிழந்த இலங்கைப் படை வீரர்களை போற்றிப் புகழ்ந்து சிலாகித்துக் கருத்துரைத்தார்.**

**பொப்பி மலர் தின நிகழ்வுகள் வழமைபோல நவம்பர் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையான நேற்று கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் உள்ள போர் வீரர்கள் நினைவுத் தூபிக்கு அருகில் நடைபெற்றன.**

**ஆனாலும், இந்த பொப்பி மலர்கள் தின நிகழ்வுகள் வடக்கு, கிழக்கில் இடம்பெறவில்லை. தமிழ் மக்கள் யாரும் அதில் ஆர்வமோ, ஈடுபாடோ காட்டவில்லை.**

**மாறாக அத்தினத்தை ஒட்டி அவர்கள் மனதிலும் ஒரு வன்மம் – குரோதம் – இழையோடி நிற்கின்றமையை புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.**

**யுத்தத்தில் வீழ்ந்தவர்கள் – மரணித்தவர்கள் – அவர்கள் எந்தத் தரப்பினரைச் சேர்ந்தவர்கள் எனினும், தங்கள் இன்னுயிரை தாம் சார்ந்த தரப்புக்காக – மக்களுக்காக – ஈந்து, தியாகம் செய்து, யுத்த வேள்வியில் ஆகுதியாகி, மடிந்து விட்டார்கள்.**

**ஆனால், அந்த வீரர்கள் குறித்து ஒரு தரப்பு மக்கள் மத்தியில் கௌரவம், பெருமை, போற்றுதல் எல்லாம் செய்யப்படுகின்றன. மறு தரப்பில் சீற்றம், கோபம், வைராக்கியம் எல்லாம் தொடர்கின்றன.**

**பொப்பி மலர் அனுஷ்டானம் போல தமிழர்கள் தரப்பில் மாவீரரை மதித்துப் போற்றும் மாண்பு தினமும் இதே கார்த்திகை மாதத்தில்தான் வருகின்றது.**

**தமது உரிமைப் போராட்டத்துக்காக நாற்பத்தியையாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளைக் காவு கொடுத்த தமிழர்கள், தங்கள் பொப்பி மலர் தினமாக நவம்பர் 27ஆம் திகதியை அனுஷ்டிக்கின்றனர்.**

**எப்படி பொப்பி மலர் தினம் தொடர்பாக தமிழர்கள் மனதில் விரோதமும், குரோதமும், வன்மமும் இழையோடியிருக்கின்றதோ அதை விட மோசமான அளவுக்கு, தமிழினத்துக்காக யுத்தத்தில் செத்து மடிந்த மாவீரர்கள் தொடர்பில் – மாவீரர் தினம் தொடர்பில் – சிங்களத்தின் மனநிலை உள்ளது என்பது வெளிப்படையானது.**

**யுத்தத்தில் மடிந்த மாவீரர்களாக ஒரு தரப்புத் துருப்பினரை மறுதரப்பு எண்ணாத அவல நிலையையே நம் மண்ணில் நீடிக்கின்றது.**

**அவர்கள், இவர்களை இன்னும் 'பயங்கரவாதிகள்' என்றே கருதுகின்றார்கள். இவர்கள் அவர்களை இன்னும் 'ஆக்கிரமிப்புக்கான கொடூரவாதிகள்' என்றோ 'அரச பயங்கரவாதிகள்' என்றோதான் எண்ணுகின்றாகள்; கருதுகின்றார்கள்; மனநிலை கொண்டுள்ளார்கள்.**

**எதிர்த் தரப்பில் இருக்கும் யுத்த வீரத்தையும் மதிக்கும் உயரிய மாண்பு நமக்கு இருக்குமானால் இன்னும் 'எதிரித்தனம்' காட்டிப் பகைக்கும் சிறுமைத்தனம் நீடிக்காது.**

**தமிழர் தேசமும், சிங்கள தேசமும் இலங்கைத் தீவில் உண்மை நட்புறவுடன் ஒற்றுமைப்பட்டு ஒரே நாடாக எழ வேண்டுமானால் –**

**அதற்கு வடக்கு, கிழக்கில் தமிழ் தலைவர்கள் முன்னின்று பொப்பி மலர் நிகழ்வை முன்னெடுக்க, தெற்கில் சிங்களத் தலைவர்கள் மரணித்த வீரர்களுக்காக மாவீரர் தினத்தன்றும் விளக்கேற்ற வேண்டும்.**

**அத்தகைய மாண்புறு நாள் இந்தத் தீவில் வரவேமாட்டாது என்பதுதான் நமது துன்பியல் நிலைமையாகும்.**

# சுகாதார வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும்!

## நாமல் கோரிக்கை



கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாழ வேண்டிய தேவை அனைவருக்கும் தற்போது ஏற்பட்டுள்ளதென இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் நாமல் ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

கொரோனாவால் இன்று உலகமே பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது.

எமக்கும் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அதற்காக மக்கள் தமது அன்றாட கடமைகளிலிருந்து விலகியிருக்க முடியாது.

மேலும், இந்த இடங்கள் தொடர்பாக அரச பொறிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை பௌதீக வள அபிவிருத்தியுடன் இணைந்ததாக, ஆளணி வள அபிவிருத்தியையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

மேலும், தற்போதைய உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி ஆளணி வளத்தையும் அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் அபிலாஷையாகும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் கைக்குண்டு மீட்பு



மட்டக்களப்பு, நவ.16

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் கைக்குண்டொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் விவசாய நடவடிக்கைக்காக நிலத்தைப் பண்படுத்துகையில் பிளாஸ்டிக் பாத்திரம் ஒன்றிலிருந்து இந்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளி காக்காச்சிவட்டை எனும் கிராமத்திலே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டதாகவும், இதனை நீதிமன்ற அனுமதியைப்பெற்று குண்டு அகற்றும் விசேட அதிரடிப் படை மூலம் அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு வெல்லாவெளி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி முன்னைய காலங்களில் விடுதைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி என்பதுடன் இந்தச் சம்பவம் தொடர் பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனா விதிகளை மீறிய பலர் கைதாகினர்!



கொழும்பு, நவ.16

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளி பேணாதமை தொடர்பில் இதுவரையில் 201 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு ஒலிப்பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் ஆள்நடமாட்டம் தொடர்பில், கண்காணிப்பதற்காக விமானப்படையினரின் ஒத்துழைப்புடன் ட்ரோன் கமெராக்களின் ஊடாகக் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமைய கடந்த வியாழக்கிழமை 15 பேரும், கடந்த வெள்ளிக்கிழமை 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் இதுவரையில் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்தப் பகுதிகளில் அத்தியாவசிய சேவைகள் மற்றும் வைத்திய சிகிச்சைகளுக்காக மாத்திரமே பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமூக இடைவெளிபேணாமை மற்றும் முகக்கவசம் அணியாமை தொடர்பில் நேற்று சனிக்கிழமை மாத்திரம் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது நீர்கொழும்பு, கட்டுநாயக்க மற்றும் சீதுவ ஆகிய பகுதிகளிலேயே அதிகளவானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய இதுவரையில் இந்த சட்ட விதிகளை மீறினர் என 201 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மேல்மாகாணத்திலிருந்து வெளியேறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

எனினும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் மாத்திரம் மேல்மாகாணத்திற் குள் அனுமதிக்கப்படுகின்றமையுடன், ஏனையவர்கள் மேல் மாகாணத்துக்குள் வருவதற்கோ அல்லது அங்கிருந்து வெளியேறுவதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
'மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான்
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்
மனிதன் மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா... ஒவ்வொரு மரமும் போதிமரம்!'
- கவிஞர் வைரமுத்து

# 5 ஆயிரம் ரூபா நிவாரண நிதி அரசியல் ஆக்கப்பட்டுள்ளது!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் அனைத்து யோசனைகளையும் அரசாங்கம் குறைத்தே மதிப்பிட்டு வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கின்ஸ் நெல்சன் குற்றம்சாட்டினார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பில் செயற்பட்டு வரும் சுகாதார பிரிவினரை தனது இடத்துக்கு இட மாற்றம் செய்துவரும் ஆளும் தரப்பினர், 5 ஆயிரம் ரூபா நிவாரண நிதியையும் அரசியலாக்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொரோனா வைரஸ் பரவலின் முதலாம் அலையை சுகாதார பிரிவினர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினரும் இணைந்து சிறந்த முறையில் கட்டுப்படுத்தியிருந்தனர். அப்போதைய சுகாதார பணிப்பாளர் நாயகம் அனில்ஜாசிங்கவும் சிறந்த முறையில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்.

எனினும் அரசாங்கம் அவரை இந்தப் பதவியிலிருந்து மாற்றியுள்ளது. இந்நிலையில் அவருக்கு பதவி



உயர்வு வழங்கியதாகவும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. அவருக்கு பதவி உயர்வு வழங்குவதாயின் சுகாதார பிரிவில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் சுற்றாடல் துறைக்கே அவர் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதேவேளை, சுகாதார அமைச்சின் ஊடகப்பேச்சாளராக நியமிக்கப்பட்ட ஜயருவன் பண்டாரவையும் தற்போது சுகாதார அமைச்சர் இந்த பதவியிலிருந்து நீக்கியுள்ளார். அரசாங்கம் தனது தனிப்பட்ட விருப்பத்தில் இவ்வாறான முடிவுகளை எடுத்து வருகின்றது.

ஐயாயிரம் ரூபா நிவாரணம் பணம் வழங்கும் போதும் கிராமசேவகர்கள் மற்றும் அரச ஊழியர்கள் சிறந்தமுறையில் அவற்றை வழங்கி வந்தனர். இந்த செயற்பாடுகளிலே பிரதேசசபை உறுப்பினர்கள் தேவையற்ற முறையில் தலையிட்டதன் காரணமாக அதில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நாம் சிறந்த யோசனைகளை முன்வைத்தாலும் அதனை ஆளும் தரப்பினர் குறைத்தே மதிப்பிட்டு வருகின்றனர்.

இன்று விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இவர்களுக்கு அவசியமான பசளைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் முறையான செயற்பாடுகள் எதுவும் இல்லை. இன்று யானை – மனிதன் மோதலால் பல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இவை எதற்கும் அரசாங்கம் தீர்வு காணவில்லை. 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதில் மாத்திரமே இவர்களுக்கு அக்கறை இருந்தது.

இன்று ஏற்பட்டுள்ள அரிசிக்கான தட்டுப்பாடு தொடர்பிலும் அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டும். ஆரம்பத்தில் பொலன்னறுவை மாவட்டத்தில் சிறிய அளவிலான அரிசி ஆலைகள் பல காணப்பட்டன. எனினும் தற்போது ஆளும் தரப்புடன் தொடர்புகொண்டுள்ள இருவரே பாரியளவிலான ஆலைகளை வைத்துள்ளனர்.

அவர்களுடன் கலந்துரையாடியும் இவர்களால் நியாயமான விலைக்கு அரிசியை பெற்றுக் கொடுக்க முடியாமல் போயுள்ளது. – என்றார்.

## போகம்பரை சிறையில் தொற்று கண்டி நகரத்துக்குப் பேராபத்து!

போகம்பரை சிறைச்சாலையில் பரவியுள்ள கொரோனா வைரஸ் காரணமாக கண்டி நகர் பாதிக்கப்படலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போகம்பர சிறைச்சாலையில் மேலும் 80 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையையடுத்து, பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 125 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், போகம்பர சிறைச்சாலையில் நிலைமை மோசமடைவதால், 100 நோயாளிகளைத் தனிமைப்படுத்துவதற்கான நிலையத்தையே உருவாக்கிய நிலையில், சிறைச்சாலையில் 800 இற்கும் அதிகமான கைதிகள் உள்ளனர் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை ஊழியர்கள் உணவு போன்றவற்றைப் பெறுவதற்காக கண்டி நகருக்குச் செல்கின்றனர் என்றும் இதன் காரணமாக கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தாவிட்டால் கண்டிநகர் பாதிக்கப்படலாம் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## சிறைச்சாலையிலிருந்து மேலும் 108 தொற்றாளர்!

கொழும்பு, நவ.16

சிறைச்சாலைகளுடன் தொடர்புடைய மேலும் 108 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே 329 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், நேற்று மேலும் 108 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய சிறைச்சாலைகளுடன் தொடர்புடைய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 437 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் அனைவரும் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## களுத்துறையில் 803 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

களுத்துறை மாவட்டத்தில் இதுவரை 803 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்தப் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் உதய ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

களுத்துறையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில், 18 பேர் கர்ப்பிணிகள் என்பதுடன், 9 பேர் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள்.

குறித்த தொற்றாளர்களில் 121 பேர் ஹொரணை பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், களுத்துறை – அகலவத்தை பகுதியில் 23 பேரும், பண்டாரகம பகுதியில் 70 பேரும், புளத்சிங்கள பகுதியில் 41 பேரும், தொடங்கொட பகுதியில் 04 பேரும், பேருவளை பகுதியில் 77 பேரும், இங்கிரிய பகுதியில் 90 பேரும், களுத்துறை பகுதியில் 57 பேரும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, மதுராவல பகுதியில் 51 பேரும், மதுகம பகுதியில் 67 பேரும், மில்லனிய பகுதியில் 37 பேரும், பாலிந்தநுவர பகுதியில் 11 பேரும், பாணந்துறை பகுதியில் 69 பேரும், வாத்துவ பகுதியில் 63 பேரும், வலல்லாவிட பகுதியில் 22 பேரும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 583 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று மட்டும் 214 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை பதினொராயிரத்து 324 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 206 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் இதுவரை 53 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருகுலம் தொலைக்காட்சி நேர அட்டவணை அறிவிப்பு

கல்வி நடவடிக்கைகளை வீட்டில் இருந்தவாறே தொடரும் வகையில், கல்வி அமைச்சால் நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ள குருகுலம் தொலைக்காட்சி சேவைக்கான நேர அட்டவணையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் இந்த தொலைக்காட்சி சேவை இடம்பெறவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாளை அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் இந்த கல்வி சேவைக்கான நேர அட்டவணை, எதிர்வரும் 22ஆம் திகதி வரை பட்டியலிடப்பட்டுள்ளது.

அதிகாலை 4 மணி முதல் நள்ளிரவு 12 வரை இந்த கல்வி சேவை ஒளிபரப்பாகும் எனக் கல்வி அமைச்சு குறிப்பிடுகின்றது.

3 ஆம் தரம் முதல் 13 ஆம் தரம் வரையான வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு தொலைக்காட்சி ஊடாக இந்தக் கல்விநடவடிக்கைகள் தொடரப்படவுள்ளன.

## சமூக இடைவெளி பேணாமை பஸ் நடத்துநர், சாரதி கைது!

பஸ்ஸில் சமூக இடைவெளியை உறுதி செய்யத் தவறிய குற்றச்சாட்டில் பஸ் ஒன்றின் சாரதி மற்றும் நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து மதுகம வரை இயங்கும் பஸ் ஒன்றில் சமூக இடைவெளிப் பின்பற்றப்படவில்லையென பாணந்துறைப் பொலிஸ் நிலையத்தில் பயணிகளால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பஸ்ஸை சுற்றி வளைத்த பொலிஸார் சாரதி மற்றும் நடத்துநரை கைது செய்துள்ளமையுடன், அந்த பஸ்ஸையும் கைப்பற்றியுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறியதற்கான காணொலி சான்றுகள் பெறப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். இந்த நிலையில், அந்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## விடுமுறைகள் குறைக்கப்பட்டுள்ள பாடசாலை நாள்காட்டி வெளியீடு!

கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக இந்த ஆண்டு பாடசாலை செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட நிலையில், 2021 இல் விடுமுறைகள் குறைக்கப்பட்ட பாடசாலை நாட்காட்டி கல்வியமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகள் 2021 ஆம் ஆண்டு முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக முதலாம் கட்டமாக ஜனவரி 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் 33/2020 சுற்றறிக்கையின படியே இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி முதலாம் தவணையின் முதல் கட்டம் ஜனவரி 4 ஆம் திகதி முதல் ஜனவரி 15 ஆம் திகதி வரை (சனி, ஞாயிறு உட்பட) இடம்பெறவுள்ளது.

அத்தோடு ஜனவரி 16 – 31 ஆம் திகதிகள் வரை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைகளுக்கான விடுமுறைகள் வழங்கப்படவுள்ளன.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் பெப்ரவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 9ஆம் திகதி வரை (சனி, ஞாயிறு உட்பட) இடம்பெறவுள்ளது.

இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் 19ஆம் திகதி முதல் ஜூலை 30ஆம் திகதி வரையும் (சனி, ஞாயிறு உட்பட), மூன்றாம் தவணை ஓகஸ்ட் 30 முதல் டிசம்பர் 3 ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை முஸ்லிம் பாடசாலைகளின் 2021 ஆம் ஆண்டு கல்வி நடவடிக்கைகளில் முதலாம் தவணையின் முதல் கட்டம் ஜனவரி 4 ஆம் திகதி முதல் ஜனவரி 15 ஆம் திகதி வரை (சனி, ஞாயிறு உட்பட) இடம்பெறவுள்ளதோடு ஜனவரி 16 – 31 ஆம் திகதிகள் வரை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைகளுக்கான விடுமுறைகள் வழங்கப்படவுள்ளன.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் பெப்ரவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 9 ஆம் திகதி வரை (சனி, ஞாயிறு உட்பட) இடம்பெறவுள்ளது.

இரண்டாம் தவணையானது மே 17ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஓகஸ்ட் 25 புதன்கிழமை வரை ((சனி, ஞாயிறு உட்பட)) இடம்பெறும். ஓகஸ்ட் 26 மற்றும் 27 ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் தவணையானது ஓகஸ்ட் 30 முதல் டிசெம்பர் 3 ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள நாட்காட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா!**
**பாபமெல்லாம் அழிப்பவரே சரணம் ஐயப்பா!**

# ஐயப்ப சுவாமிக்கு இன்று விரதமாலை அணிந்து மண்டல விரதம் காப்போம்!

சபரிமலை ஸ்ரீ ஐயப்பனுடைய மண்டல விரதத்தில் தேவையற்ற நடைமுறையில் இல்லா விடயங்களை விடுத்து பக்தி பூர்வமாக விரதத்தை அனைவரும் கைக்கொள்ள வேண்டும்.

இன்று 16 ஆம் திகதி திங்கட்கிழமை விரதமாலை அணிந்து 41 நாள்கள் மண்டலவிரதம் அனுட்டிப்போர் விரத விதிமுறைகளைச் சரியாக தெரிந்துகொண்டு – பக்குவமாக ஐயப்பனைத் துதிக்க வேண்டும். இவ்விரதத்தில் குருஸ்வாமிகள் மற்றும் பழமலைக் காரர்களை விட கன்னிஸ்வாமிக்கே கூடிய பெருமை உண்டு. இதைவிடுத்து குருஸ்வாமிகளை ஐயப்பனை விட மேலானவராக வழிபட வேண்டிய கட்டாயம் இல்லை. குருஸ்வாமி ஐயப்பனுடைய விரதத்திற்கு வழிகாட்டுபவராக இருக்க வேண்டுமே அன்றி ஐயப்பனை விட உயர்வாகத் தன்னை ஒருபோதும் எண்ணத்திலும் நினைக்கக்கூடாது.

ஒரு சில குருஸ்வாமிகளின் தவறான வழிகாட்டுதல்களாலேயே இன்று நாம் ஐயப்பனை வழிபடச் செல்ல முடியாத நிலை வந்துள்ளது. அமைதியாக நாம் இருப்பதால் இவர்களுடைய தப்பான நடைமுறைகள் அதிகரித்துக் கொண்டு போவதால் கடந்த வருடங்களில் பகிரங்கமாகவே ஒரு சில குருஸ்வாமிகளுக்கு அவர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டிப் பல கடிதங்களையும் அறிக்கைகளையும் அனுப்பியிருந்தும் எவரும் திருந்துவதாக இல்லை.

கடந்த சில வருடங்களில் நடைபெற்ற சில சம்பவங்களை இன்று நான் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

1. 2016 இல் அனைத்து வயதுப் பெண்களுக்கும்



அனுமதி என கேரள மாநில அரசு உயர்நீதிமன்றம் அறிவித்தது. இதற்கு எதிராகத் திருவிதாங்கூர் தேவஸம் போர்ட ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது. வழக்கு விசாரணை 2017க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

2. 2017 இல் புதிதாக 9,200 கிலோ கிராம் தங்கத் தகடுகளால் செய்யப்பட்ட கொடிமரத்தின் மீது அசிட் வீசிய ஆந்திராவைச் சேர்ந்த 3 பேரை சிசிடிவி கமரா மூலம் பம்பையில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

3. மார்ச் 2018ல் பம்பையில் ஆராட்டுக்கு எழுந்தருளிய ஐயப்பனை சுமந்து வந்த யானைக்கு மதம் பிடித்து 9பேர் காயமடைந்த நிலையில் ஆராட்டு சுமுகமாக நடந்தது.

4. 14.05.2018ல் மூத்ததந்திரி ஸ்ரீ கண்டரருமகேஸ்வரரு ஐயனிடம் சரணடைந்தார்.

5. 17.05.2018ல் 3 நாள் அஷ்டமங்கல தேவராஸ்னம் நடந்து சில பரிகாரங்கள் கூறப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.





6. 2018 ஆவணி ஓணத்திற்கு பக்தர்கள் எவரும் போக முடியாதவாறு பம்பையில் 30 அடிக்கு மேல் வெள்ளம் பாய்ந்தது. தமிழக பக்தர்கள் சென்னையில் ராஜா அண்ணாமலைபுரத்திலும் எம்.ஆர்.ஜி. நகரிலும், மடிப்பாக்கத்திலும், அண்ணாநகரிலும் உள்ள ஐயப்பன் கோவில்களில் படிகளேறி இரு முடி அபிடேகம் செய்வித்தார்கள்.

7. வருடந்தோறும் நடைபெறும் நிறை புத்தரிசி நிகழ்வுக்கும் எவ ருமே செல்ல முடியாத நிலையில் 3 கிறிஸ்தவ இளைஞர்களான ஜொபின்,குருப், ஜோபி இவர்களு டன் சந்தோஷ் ஆகிய நால்வர் பம்பை ஆற்றைக் கடந்து நீந்திச் சென்று – சாக்கு மூட்டையில் கட்டிய நெற்கதிர்களை உரிய நேரத்தில் கொண்டு போய்க் கொடுத்து அந்தப் பூஜையை செவ்வனே செய்து முடித்தமை அனைவரதும் பாராட்டைப் பெற்ற ஒரு நிகழ்வாகும்.

8. அனைத்துப் பெண்களும் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குச் செல்லலாம் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பை ஏற்க முடியாத 80வயது டைய 60ஆண்டுகளாக சபரிமலை சென்று வந்த ராமகிருஷ்ணன் குருஸ்வாமி கோவில் நடைதிறக்கும் முன் நான் உலகைவிட்டுச் செல்கிறேன் எனக் கூறி ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண் டமை எம்மவரை மிகவும் பாதித்தது. 200 வருடங்களுக்க மேலாக கடைப்பிடிக்கப்பட்ட ஒரு பழமையான நடைமுறையை அரசு தன்னிஷ்டத்துக்கு மாற்றியதே பல விபரீதமான நிகழ்வுகளுக்கு காரணமாக அமைந்திருக்கிறது என்பது எமது வாதமாகும்.



9. 2018 காரத்திகையில், நாம் விரதமிருந்து 2019 ஜனவரியில் சபரிமலை யாத்திரை சென்ற போது பம்பையின் அழிவுகளை நேரடியாகக் காணமுடிந்தது.

10. பொலிஸ் பாதுகாப்புடன் பெண்கள் சபரிமலைக்குச் சென்ற போதும் பாரிய

எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது. எனினும் ஓரிரு இளம் பெண்கள் சந்நிதானத்துக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

11. 15.08.2018 கொழும்பு அளுத்மாவத்தை ஐயப்பன் மோதரைக் கடற்கரைக்கு எழுந்தருளியபோது நடந்த விபரீதமும் நாமறிவோம். அதன்பின் கடந்த 2 வருடங்களாக ஆராட்டு ஆல யத்திலேயே நடந்துவருகிறது.

12. கடந்த 2019 கார்த்திகை மாலை அணிய வேண்டிய நாளில் ஜனாதிபதித்தேர்தல்வந்தபடியால்ஏதேனும் விபரீ தம் நிகழ்ந்து விடுமோ எனஎல்லாம்வல்லஐயப்பனுடைய சக்தியையும் அருளையும் மீறி, எமது குருஸ்வாமிகள் சிலர் ஐப்பசி 31ஆம் நாளிலேயே கணபதி ஹோமம் நடத்தி மாலை அணிந்ததும் இன்றைய இக்கட்டான நிலைக்கு முக்கிய காரணமாக அமையலாம் என்பது என்னுடைய பணிவான கருத்து.

13. தத்வமஸியின் உண்மை விளக்கத்தை அறியாத – இது வரை பல தடவைகள் சென்றும் அறிந்திராத ஒரு சில குருஸ்வாமிகளுக்காக நாம் எமது முடிவை மாற்றாது இம்முறையும் முறையாக விரதமிருந்து கட்டுவனிலோ, கோண்டாவிலிலோ, கொழும்பிலோ அல்லது இன்று பல இடங்களில் 18 படிகளோடு கூடிய ஐயப்பன் கோவில்களில் இருமுடியோடு 18 படியேறி நெய்யபிகேம் செய்ய ஐயப்ப பக்தர்கள் திடசங்கற்பம் பூண வேண்டுமென தயவாக வேண்டுகிறேன்.

**தங்க. முகுந்தன்.**
**(குருஸ்வாமி, சபரி ஐயப்பன் யாத்திரைக் குழு, மூளாய் - சுழிபுரம்)**

## கொரோனாவிலிருந்து 293 பேர் மீண்டனர்!

*நாட்டில் நேற்று மேலும் 293 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*அதன்படி, நாட்டில் இதுவரை 11 ஆயிரத்து 324 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர்.*

*இதேவேளை, இலங்கையில் இதுவரை 16 ஆயிரத்து 191 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், 4 ஆயிரத்து 814 பேர் தற்போது வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*அத்துடன் 458 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.*

*இந்நிலையில் இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி 53 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## நாட்டில் மழையுடனான வானிலை அடுத்த சில நாள்கள் அதிகரிக்கும்

நாட்டில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை அடுத்த சில நாள்களில் சற்று அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# யாழ். போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சை இன்று முதல் விக்ரோரியா வீதியில் நடைபெறும்!

## பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா தெரிவிப்பு

யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சைக்குரிய சிகிச்சைகள் இன்று முதல் விக்ரோரியா வீதியில் அமைந்துள்ள சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளன என யாழ் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

அத்தோது மகப்போற்று பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவும் மீண்டும் பழைய இடத்துக்கு மாற்றப்பட்டு இன்று முதல் இயங்கவுள்ளதாக வைத்தியர் சி.யமுனாநந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சி.யமுனாநந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளிகளுக்கான சிகிச்சைகள் எவ்வித தடங்கலுமின்றி செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வெளி நோயோளர் பிரிவில் சிகிச்சைபெற நேயாளர்கள் வந்த வண்னம் உள்ளார்கள்.

தற்போது கொரோனா வைரஸ் காரனமாக சமூக இடைவெளியைப் பேணும்வகையில் கிளினிக் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த சில மாதங்களாகத் தனிப்பட்ட பிரிவில் இயங்கி வந்த மகப்பேற்று பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவு மீண்டும் பழைய இடத்துக்கு மாற்றப்பட்டு இன்று முதல் இயங்கவுள்ளது.

மேலும் இருதய சிகிச்சைக்குரிய கிளினிக்குகளானவை விக்ரோரியா வீதியில் உள்ள கிளிக் கொம்பிளக்ஸில் இன்றுமுதல் நடைபெறவுள்ளன.

எனவே நோயாளிகள் அங்கு நேரே வந்து வைத்திய ஆலோசனைகளைப் பெற்று மருந்துகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் மூலம் நோயாளர்களின் நெருக்கத்தைக் குறைத்துக்கொள்ள முடியும் என நம்புகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

# தரமற்ற முகக் கவசம் விற்பனைக்குத் தடை!





**வவுனியாவில் சுகாதார பரிசோதகர்கள் விதிப்பு**

கொவிட் 19 இன் தாக்கம் நாட்டில் அதிகரித்து வரும்நிலையில் கொவிட் - 19 தாக்கம் அற்ற வவுனியாவை கட்டியெழுப்புவோம் எனும் எண்ணக்கருவில் வவுனியா மாவட்ட சுகாதார பிரிவினர் தரம் குறைவான முகக் கவசங்களை விற்பனை செய்ய தடை விதித்துள்ளனர்.

வவுனியா நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இவ்வாறு தடை விதிக்கப்பட்டது.

இதன் போது தரம் குறைவான முகக்கவசங்கள் பல சில வர்த்தக நிலையங்களில் இருந்து சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டமையுடன், அவற்றை விற்பனை செய்த வர்த்தக நிலையங்களுக்கு கடும் எச்சரிக்கையும் விடுவிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில்சேவையில் முழுமையாக பாதுகாப்பு நடவடிக்கை இல்லை!

## ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் விசனம்

கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் ரயில் சேவையைப் பயன்படுத்தும் பொதுப் பயணிகளின் சுகாதார பாதுகாப்பு பாரிய அச்சுறுத்தலில் காணப்படுகிறது. சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ள பாதுகாப்பு அம்சங்கள் ரயில் சேவையில் முழுமையாக செயற்படுத்தப்படவில்லை.

இவ்வாறான நிலை தொடருமாயின் கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாம் அலை ரயில் சேவையாக பெயர் பெறும் என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் பிரதான செயலர் கசுன் சாமர தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் தாக்கம் முதலாம் அலையினை காட்டிலும் தற்போது வெகுவிரைவாக பரவலடைந்துள்ளது. இவ்வாறான நிலையில் கடந்த வாரம் ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன. சுகாதார அமைச்சு வெளியிட்ட சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் ரயில் சேவை ஆரம்பிக்கவில்லை. ரயில் சேவையில் பல குறைப்பாடுகள் காணப்படுகின்றன.

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் இதர ரயில் சேவையாளர்களுக்கும் முக்கவசம் மற்றும் ஏனைய சுகாதார உபகரணங்கள் ஏதும் வழங்கப்படவில்லை.

ரயிலில் பயணிகள் ஒரு மீற்றர் தூர இடைவெளியில் பயணம் செய்யவில்லை. இவ்வாறான நிலையில் பொது பயணிகளின் சுகாதார பாதுகாப்பு சவாலுக்குள்ளாகும்.

ரயில் சேவையில் நவீன தொழினுட்ப வசதிகளை செயற்படுத்துமாறு திணைக்களத்துக்கு செயற்திட்டங்களைச் சமர்ப்பித்தோம். ஆனால் இதுவரையில் சாதகமான நடவடிக்கைகள் ஏதும் முன்னைடுக்கப்படவில்லை. குறைபாடுகளுக்கு மத்தியில் ரயில் சேவை நடைமுறைப்படுத்தினால் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாம் சுற்றின் மூல பரவல் ரயில் சேவை என பெயர் பெறும். – என்றார்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேருக்குத் தொற்று உறுதி

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொம்பே பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்படுகின்றது.

குறித்த குடும்ப உறுப்பினரில் ஒருவர், துறைமுகத்தில் பணியாற்றுபவராவார். இந்நிலையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அவரது குடும்ப உறுப்பினர் அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் தற்போது வெளியாகியுள்ள அவர்களின் பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளிலேயே இந்த 7 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய 10 குடும்பங்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வடக்கு விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு!

## அமைச்சர் டக்ளஸின் முயற்சியால்



வடக்கு விவசாயிகளுக்கு உருளைக் கிழங்கு விதைகளை மானிய அடிப்படையில் வழங்குவதற்கான நிதி அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இன்னும் சில வாரங்களில் அவற்றை பயனாளிக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதியால் தனக்கு வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சரால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலே இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கில் 200 ஹெக்ரேயரில் உருளைக் கிழங்கு பயிர்செய்கைக்கு விவசாரயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்ற நிலையில் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் உருளைக் கிழங்கு விதைகளைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

மேலும், இந்தத் திட்டம் வடக்கில் வெற்றியளிக்குமாயின் உருளைக் கிழங்கு இறக்குமதியை கணிசமான அளவு குறைத்து அந்நியச் செலாணியை மீதப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தமையுடன் எதிர்காலத்தில் உருளைக் கிழங்கைப் பதனிட்டு பல்வேறு தீன்பண்டங்களை உற்பத்தி செய்யும் சர்வதேச தரத்திலான தொழிற்சாலைகளை நிறுவி வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை வரவேற்ற ஜனாதிபதி, விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவது தற்போதைய அரசாங்கத்தின் நோக்கங்களில் ஒன்று என்ற அடிப்படையில் வடக்கு விவசாயிகளின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் தேவையான உருளைக் கிழங்கு விதைகள் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்று உறுதியளித்திருந்தார் எனக் குறிப்பிடத்தக்கது.

# யாழ். மயிலிட்டியில் கடும் காற்று மீனவரின் ட்ரோலர் படகு சேதம்!



யாழ்ப்பாணம் - மயிலிட்டி கடற்பரப்பில் நேற்று அதிகாலை வீசிய கடும் காற்று காரணமாக மீனவர் ஒருவருக்குச் சொந்தமான ட்ரோலர் படகு ஒன்று சேதமடைந்துள்ளது.

சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான அந்தப் படகு நீரில் மூழ்கியதில் இயந்திரம் மற்றும் படகின் சில பகுதிகள் சேதமாகியுள்ளன.

மயிலிட்டி துறைமுகத்தின் கட்டுமான வேலைகளில் காணப்படும் குறைபாடு காரணமாகவே படகு சேதமடைந்துள்ளதாக மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்க தலைவரும், படகின் உரிமையாளருமான சுப்பிரமணியம் சியசிங்கம் தெரிவித்துள்ளார்.

சுமார் 30 வருடங்கள் நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் பின்பு இந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியேறியமையின் பின்பு, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் துறைமுகத்தின் கட்டுமாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

கட்டுமானப்பணிகள் சீரான முறையில் நடைபெறாமையால் மீனவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் சிறிதரன் எம்.பி. தலைமையில் துப்பரவு

## பொலிஸார் நேரில் விசாரணை; வாக்குமூலமும் பதிவு

கிளிநொச்சியிலுள்ள மாவீரர் துயி லும் இல்லத்தைத் துப்பரவு செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்றஉறுப்பினர் சி.சிறிதரன் உள்ளிட்டோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சுகாதார நடைமுறைகளுடன் துப்பரவு பணிகளில் ஈடுபடவும் பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர்.

இன்று காலை 9 மணியளவில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் துப்பரவு செய்யும் பணிகள் இடம்பெற்றன. நாடாளுமன்ற உறுப்பினருடன் பொதுமக்களும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





துப்பரவுப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் அப்பகுதிக்கு வருகை தந்ததுடன், கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் புஸ்பகுமாரவும் வருகை தந்திருந்தார்.

தற்போதுள்ள கொரோனா காலப்பகுதியில் அதிகளவான மக்கள் கூடியிருப்பது தொடர்பில் சிறிதரன் எம்.பியிடம் பொலிஸார் வினவினர். இதற்குப் பதிலளித்த அவர், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே நாம் சிரமதானப் பணியில் ஈடு பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டும் எனப் பொலிஸார் தெரிவித்ததையடுத்து அதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய சிறிதரன் எம்.பி. உள்ளிட்ட பலரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதுடன், சிரமதானத் துக்கு வருகை தந்திருந்தவர்களின் பெயர் விவரம் மற்றும் வாகன இலக்கங்களும் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டன. அங்கு வருகை தந்திருந்தவர்களைப் பொலிஸார் ஒளிப்பதிவும் செய்தனர்.

வாக்குமூலம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சிறிதரன் எம்.பி.-

கடந்த வருடம் மாவீரர் நாள் நினை வேந்தலுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எவ்வித தடையும் விதிக்கவில்லை. இவ்வாறான நிலையில் இம் முறையும் தடை விதிக்கப்படாது என்று நம்புகின்றேன். இவ் விடயம் தொடர்பில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளேன். அதேபோன்று நேற்றுமுன்தினம் சுமந்திரன் எம்.பி. இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் உரையாற்றியும் இருந்தார்.

இவ்வாறானநிலையில் கடந்த வருடம் போன்று இவ்வருடமும் மாவீரர் நினை வேந்தலை நடத்துவதற்குத் தடை விதிக்கப்படாது என்று நம்புகின்றேன்.

இன்று எம்மிடம் வாக்குமூலத்தைப் பொலிஸார் பதிவு செய்தனர். சுகாதார நடைமறைகளைப் பின்பற்றியே துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக அவர்களிடம் தெரிவித்துள்ளோம். இதுவரை எவ்வித தடைகளும் விதிக்கப்படவில்லை.

கொரோனா காலத்தில் இத்தனை பேர் ஏன் திரண்டீர்கள் எனப் பொலிஸார் கேட்டனர். கடந்த சில நாள்களுக்கு முன்னர் யாழ். கச்சேரியில் 250 இற்கு மேற்பட்டோர் ஒன்றாகக் கூடியிருந்தனர். ஆனால், இங்கு மிகக் குறைவானோரே கூடினோம் என்று பதிலளித்தோம்.

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதை தொடர்ந்து சமூக இடைவெளிகளை பேணியும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் துப்பரவுப் பணியில் ஈடுபடுமாறு பொலிஸார் பணித்தனர் - என்றார்.

# இலங்கையில் 3 வாரங்களில் 40 பேர் கொரோனாவால் சாவு

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் கடந்துள்ள 24 நாள்களில் மாத்திரம் 40 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் 22 வரையான சுமார் 8 மாத காலப்பகுதியில் கொரோனாவால் 13 பேரே உயிரிழந்திருந்தனர்.

ஒக்டோபர் 31ஆம் திகதியாகும்போது மரண எண்ணிக்கை 20 ஆக அதிகரித்தது.

எனினும், கடந்துள்ள 15 நாள்களில் மாத்திரம் 33 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 90 வீதமானோர் 60 வயதைக் கடந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கையில் கொரோனாவின் 3ஆவது அலைமூலம் நேற்று வரை 13 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இதில் 3 ஆயிரத்து 106 என்ற எண்ணிக்கையுடன் மினுவாங்கொடைக் கொத்தணிப் பரவல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தாலும், பேலியகொட கொத்தணிப் பரவல் 10 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. மூன்றாம் அலைமூலம் தொற்றுக் குள்ளானவர்களில் 8 ஆயிரத்துக்கு மேற் பட்டோர் குணமடைந்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் நேற்று நள்ளிரவு வரை 16 ஆயிரத்து 583 பேருக்குக் கொரோனா தொற்றியுள்ளது. இவர்களில் 11 ஆயி ரத்து 324 பேர் நேற்று வரை குணமடைந்துள்ளனர். 53 பேர் உயிரிழந்துள்ளனர்.



# வாளுடன் வெட்ட வந்தவரை மடக்கிய தேராவில் மக்கள்!

## பொலிஸாரிடம் ஒப்படைப்பு

முல்லைத்தீவு புதுக்குடியி ருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேராவில் பகுதியில் வாளுடன் நடமாடிய குழுவைச் சேர்ந்த ஒருவரை கிராம மக்கள் மடக்கி பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளார்கள்.

அங்கு வாள்வெட்டு குழு வின் அட்டகாசம் தாங்கமுடியாத நிலையில் உள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

சனி,ஞாயிறு நாள்களில் வாள்வெட்டு குழுவின் தொல்லை தாங்கமுடியாத நிலை காணப்படுகின்றதாம். இரவு நேரங்களில் விதவைப்பெண்களின் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்புகொள்ளும் வாள்வெட்டு குழு வீட்டிற்கு வரவா, இல்லை உன் மகளை கடத்துவேன் அல்லது மகளுக்கு கை எடுப்போன் என மிரட்டல் விடுகின்றதாம்.

இவ்வாறு மிரட்டுபவர்களின் ஒலி வடி வங்கள் பதிவு செய்யப்பட்டு பொலிஸாருக்குக் கொடுத்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இன்று காலை வாளுடன் வெட்ட வந்தவர்களை பிடித்த கிராம இளைஞர்கள் அதில் ஒருவரை வீட்டில் கட்டிவைத்து பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளார்கள்.

தேராவில் கிராமத்தைச் சேர்ந்த இளை ஞர்களே இவ்வாறு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக வாள்களுடன் நடமாடுகின்ற னர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாளுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞனிடம் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றமையுடன் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

# ஜனாதிபதி மக்களுக்கு விசேட உரை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இம் மாதம் 18ஆம் திகதி அதாவது எதிர்வரும் புதன்கிழமை நாட்டு மக்களுக்கு விடே உரையொன்றை நிகழ்த்தவுள்ளார் என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டின் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்த நாள் இந்த உரை இடம் பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சுகாதார விதிகளை மீறி பஸ் சேவை; சாரதி,நடத்துனர் தனிமைப்படுத்தலில்!

## வழித் தட அனுமதியும் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 750 வழித் தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்றின் சாரதி மற்றும் நடத்துனர் சுயதனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

தீபாவளிதிருநாளுக்குமுதல்நாளான நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பயணிகளை ஏற்றிச் சென்றமை தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கண்டறியப்பட்டு வழங்கப் பட்ட அறிக்கைக்கு அமைய கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரியினால் இந்த நடவடிக்கை இன்று ஞாயிற்றுக்கிழமை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுகாதார நடைமுறைகளை மீறி பயணிகளை ஏற்றிச் சென்றதையடுத்து அந்த பேருந்துக்கான வழித்தட அனுமதிப்பத்திரமும் சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள இரண்டாம் எச்சரிக்கை நிலையின் கீழ் பஸ்ஸின் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும். அத்தோடு பயணிகள் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும். இந்த நடைமுறைகள் பின்பற்றப்படாத நிலையில் மேற்படி தனியார் பஸ் ஒன்றின் சாரதி மற்றும் நடத்துனர் சுயதனிமைப்படுத்தப்பட்டு வழித்தட அனுமதியும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# சட்டவிரோத கடற்றொழில் முல்லை மீனவர் பாதிப்பு!

## இந்த தவறான செயற்பாடுகளை அமைச்சர்தான் ஊக்குவிக்கிறாரா?

## சந்தேகம் வெளியிட்டார் ரவிகரன்

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் மற்றும் இந்திய மீனவர்களினாலும் சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர் என வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே, கடற்றொழில் அமைச்சர் தான் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுளை ஊக்குவிக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்றது எனவும் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வடமாகாணரீதியாக நிபந்தனைகளுடன் கூடிய அட்டைத் தொழிலுக்கு அனுமதி வழங்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.

இதையடுத்து, சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் முல்லைத்தீவு மீனவர்கள் எதிர்கொண்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளைத் தென்னிலங்கை மீனவர்கள் மேற்கொண்டு வருகின்றமையாலும், இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையாலும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே சுருக்குவலை, வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், வெடிவைத்து மீன் பிடித்தல் போன்ற தென்னிலங்கை மீனவர்களின் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம், சம்மேளனம் மற்றும் மீனவ மக்கள் அனைவரும்திரண்டுபலபோராட்டங்களைமேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அரசு கூடிய கவனம் எடுத்திருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை நிறுத்துமாறு மீனவர்கள் அரசிடம் கோரியிருந்த நிலையில், சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்களே தவிர, கடற்றொழில் அமைச்சோ, அல்லது கடற்றொழில் திணைக்களமோ சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

எமது மீனவர்கள் எமது கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது என்றுதான் கேட்கின்றனர்.

தாம் சிறுதொழில்களாக, குறிப்பிட்டளவு தொழில்களை இலங்கை அரசின் கட்டுப்பாடுகளுக்கு அமைய மீன் பிடிச் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் நிலையில், சட்டவிரோதிகளாக தென்னிலங்கை மீனவர்களும், இழுவை மடிகளைப் பயன்படுத்தி இந்திய இழுவைப் படகுகளும் சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதால் தாம் முற்று முழுதாகப் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். தற்போது கார்த்திகை, மார்கழி, தை, மாசி போன்ற மாதங்களில் குறிப்பிட்டளவு நாள்களுக்குள் மாத்திரம் இறால் தொழில் முல்லைத்தீவில் அமோகமாக இடம்பெறும்.

இந்தநிலையில், தற்போது இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்களில் அத்துமீறி நுழைந்து சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமையால் எமது மீனவர்களின் இறால் தொழிலும் கேள்விக் குறியாக்கப்படுகின்றது.

எனவே, இத்தகைய செயற்பாடுகளைத் தடுக்க வேண்டியவர் யார்? இலங்கை அரசின் உரிய திணைக்களங்கள் மற்றும் உரிய அமைச்சும் அதனோடு சேர்ந்து இவர்களுடைய அறிவித்தலுக்கேற்ப கடற்படையினரும் இணைந்துதான் இந்தச் சட்டவிரோத செயற்பாடுகளையும் அத்துமீறல்களையும் தடுக்கவேண்டும். இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்காமல், அரசு முல்லைத்தீவு மீனவர்களைப் பட்டினிச்சாவினுள் தள்ளப்போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

ஒரு தமிழ் அமைச்சர் கடற்றொழில் அமைச்சராக இருந்துகொண்டு இந்த சட்ட விரோத தொழில் நடவடிக்கைகளை அவர் ஊக்குவிக்கின்றாரா என்றுதான் கேள்வி எழுப்பவேண்டியுள்ளது.

ஏனெனில், வடமாகாண ரீதியாக அட்டைத் தொழிலுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு, நிபந்தனைகளுடன் அட்டைத் தொழில் செய்ய அனுமதிக்கவுள்ளார் எனக் கடற்றொழில் அமைச்சருடைய அறிக்கைகளைப் பார்க்கமுடிகின்றது.

நிபந்தனைகளுடன் அட்டைத் தொழிலுக்கு அனுமதி வழங்கினாலும் பல்வேறு சட்டவிரோத தொழில்கள் கடலில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இவ்வாறான அனுமதிகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வழங்கப்பட்டால் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் மற்றும் சமேளனம் உள்ளடங்கலாக மீனவர்களுடன் இணைந்து பாரிய போராட்டத்தை மேற்கொள்வோம்.

மேலும், உரியவர்கள் இவ்வாறான சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். - என்றார்.

## கற்பிட்டி கடலில் கரை ஒதுங்கியது அரிய வகை சுறா!



கற்பிட்டி தழுவ கடற்பகுதியில் அரிய வகை புள்ளி சுறா ஒன்று நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது என மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த நிலையில், கரையொதுங்கிய புள்ளிச் சுறா சுமார் 2 ஆயிரம் கிலோ எடை கொண்டதாக காணப்படுவதுடன் 15 அடி நீளமுடையதாகக் காணப்படுகின்றதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

## கம்பஹாவில் சில பகுதி விடுவிப்பு!

### இராணுவத் தளபதி



கம்பஹா மாவட்டத்தில் நீர்க்கொழும்பு, ஜா - எல, கடவத்தை, ராகம மற்றும் பேலியகொட பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், களனி பொலிஸ் பிரிவு இன்று திங்கட்கிழமை காலை ஐந்து மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஏனைய பகுதிகள் இன்று காலை ஐந்து மணி முதல் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து இன்று காலை ஐந்து மணிக்கு விடுவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையரை அழைத்துவர ஐந்து விமானங்கள் ஏற்பாடு!

### வெளிவிவகார அமைச்சு

கொரோனா நோய்த்தொற்று நிலைமையின் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை ஐந்து விமானங்கள் மூலம் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நவம்பர் 18 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 290 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளமையுடன் நவம்பர் 20 ஆம் திகதி இத்தாலியிலிருந்து 100 இலங்கையர்கள் திருப்பி அழைத்து வரப்படவுள்ளனர்.

அத்துடன், 297 இலங்கையர்கள் நவம்பர் 21ஆம் திகதி கட்டாரிலிருந்து அழைத்து வரப்படவுள்ளமையுடன் மேலும் 297 இலங்கையர்கள் நவம்பர் 23 ஆம் திகதி குவைத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

நவம்பர் 26 ஆம் திகதி 290 இலங்கையர்கள் ஓமானில் இருந்து திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் வெளிநாட்டு அமைச்சின் கிழக்கு ஆசியாவுக்கான பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட அனுமதியின் அடிப்படையில் டுபாயில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ஐந்து விமானங்கள் மூலம் வெளிநாடுகளில் சிக்கியுள்ளவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## யாழ்.பல்கலைப் பேரவைக்கு புதிய உறுப்பினர் நியமனம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்குப் புதிய உறுப்பினர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பீடங்களின் பீடாதிபதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஈடுசெய்யும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் முன்னாள் தலைவரும், வாழ் நாள் பேராசிரியருமான ஞானமுத்து பிலேந்திரன், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துக்கு அமைவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான அறிவித்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கொரோனா தொற்று அச்சுறுத்தல்; பல வைத்தியசாலைகள் தயார்!

கொழும்பு,நவ. 16

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக மேலும் பல வைத்தியசாலைகள் தயார் நிலையில் உள்ளன என சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அசேல குணவர்தன மேலும் கூறியுள்ளவை வருமாறு -

தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக, அடையாளம் காணப்பட்ட வைத்தியசாலைகளில் 2 ஆயிரத்து 800 கட்டில்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மேலதிக தேவையேற்படின், இந்த வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். இதேவேளை நாடு முழுவதிலும் உள்ள 36 மத்திய நிலையங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பிலிருந்து வந்த 250 பேருக்கு மேற்பட்டோர் யாழில் பங்குபற்றிய கூட்டத்தை ஏன் தடுக்கவில்லை?

## பொலிஸாரிடம் சிறிதரன் எம்.பி. கேள்வி



யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள்கள் கொழும்பில் இருந்து வந்த அமைச்சர்களின் 250 பேருக்கு மேல் கலந்து கொண்ட கூட்டத்தை ஏன் தடுக்கவில்லை என பொலிஸாரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சிரமதானப் பணியில் சிறிதரன் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டனர்.

சிரமதானப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்க கிளிநொச்சி பொலிஸார் சென்று சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தினர்.

பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடமும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் ஆகியோரிடமும் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தமையுடன் அங்கு இருந்தவர்களிடம் தரவுகளையும் பொலிஸார் சேகரித்தனர்.

பொலிஸ் வாக்கு மூலத்தில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் நாடு பூராகவும் கொரோனா தொற்று நோயின் அபாயகரமான சூழலில் தற்போது 30 பேருக்கு மேல் நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியாது என்பது உங்களுக்கு தெரியாதா எனக் கேட்டபோது யாழ்ப்பாணத்தில் இந்த மாதத்தின் 6 ஆம், 8 ஆம் திகதிகளில் கொழும்பில் இருந்து வந்த அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் 250 பேருக்கு மேல் இரண்டு நாள்களிலும் கலந்து கொண்டனர்.

அந்தக்கூட்டமானது சிறிய மண்டபத்தில் தான் நடைபெற்றது. அந்த மண்டபத்தில் 250 பேருக்கு மேல் கூடலாம் என்றால் 7ஏ க்கர் பரப்பளவு கொண்ட கூட்டத்தில் 30 பேர் கலந்து கொள்வதா உங்களுக்குப் பிரச்சினை என்று அந்த கூட்டத்தை நடத்திய போது பொலிஸாருக்கு அது தெரியாதா எனவும் சிறிதரன் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினார். (மற்றொரு செய்தி 08ஆம் பக்கத்தில்)

---

தூதரக அதிகாரிகள் உட்பட

## 128 இலங்கையர்கள் நாடு திரும்பினார்கள்

சீனா மற்றும் மத்திய கிழக்கிலிருந்து இலங்கைத் தூதரக அதிகாரிகள் உட்பட மொத்தம் 128 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி சீனாவின் ஷாங்காயிலிருந்து ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான யு.எல் - 867 என்ற விமானத்தில் ஐந்து இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் மாலை 6.35 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான ஈ.கே. - 648 என்ற விமானத்தில் 59 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அத்துடன் கட்டார், தோஹாவிலிருந்து கட்டார் ஏயர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான கியூஆர் - 668 என்ற விமா னத்தில் 39 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 1.45 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கை தூதரக அதிகாரிகளும் டுபாயிலிருந்து எமிரேட்ஸிலிருந்தும், கட்டாரிலிருந்தும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இது தவிர டுபாயிலிருந்து ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல் -226 என்ற விமானத்தில் 25 இலங்கையர்களும் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் கொழும்பில் அமைந்துள்ள நவலோக மற்றும் லங்கா தனியார் வைத்தியசாலைகளின் ஊழியர்களால் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதன்பின்னர் பயணிகள் அனைவரும் தனிமைப்படுத்தலுக்காக நீர்கொழும்பு பகுதியில் அமைந்துள்ள பல சுற்றுலா ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டமையுடன், தூதரக அதிகாரிகள் சுயதனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

---

# அரசு பல நடவடிக்கைகளை நெருக்கடியில் எடுத்துள்ளது!

## ராஜாங்க அமைச்சர் சான் நிஷாந்த தெரிவிப்பு



கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நெருக்கடியான சூழ்நிலையிலும் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. போலியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றமையை எதிர்த்தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்குல் கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் சான் நிஷாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமா, பொதுஜன பெரமுன அரசாங்கமா அல்லது மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான அரசாங்கமா என தெரியாது. உலக வல்லரசு நாடுகளில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு கொவிட் - 19 வைரஸ் தாக்கம் பிரதான காரணியாக இருந்துள்ளது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் நெருக்கடியான சூழ்நிலையிலும் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

நெருக்கடியான நிலையில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளில் எதிர்தரப்பினர் குறைப்பாடுகளை மாத்திரம் காண்கிறார்கள். எவ்வித ஒத்துழைப்பும் வழங்கவில்லை.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கொண்டு அரசியல் இலாபம் தேடுவதை எதிர்த் தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் . வெகுவிரைவில் தற்போதைய நெருக்கடி நிலையை வெற்றி கொள்ள முடியும் என எதிர்பார்க்கிறோம். - என்றார்.

---

## ஐஸ் போதைப்பொருள்களுடன் மட்டக்களப்பில் இருவர் கைது!

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவில் ஐஸ்போதை பொருள் விற்பனையாளர்கள் இருவர் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவர்களிடமிருந்து ஐஸ் போதைப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் என வும் புதிய காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் எனவும் காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்களிடமிருந்து தலா 6 கிராமும் 400 மில்லிகிராமும், 105 கிராமும் 300 மில்லி கிராமும் ஐஸ் போதை வஸ்த்து மீட்கப்பட்டுள்ளமையுடன் ஒரு கையடக்கத் தொலைபேசி, ஒரு டெப் என்பவற்றையும் மீட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொலிஸ் அத்தியட்சகர், காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரின் வழிகாட்டலில் காத்தான் குடி பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் கடந்த சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர் வரும் 27.11.2020 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்திரவிட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## திருமலைக் கடலில் வீசப்பட்ட பஸ்கள்!

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பழைய பஸ்களை திருகோணமலை கடற்பகுதியில் நீரில் மூழ்கடிக்கும் செயற்பாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றிருந்தது.

கடலில் குப்பைகள் சேர்வதைத் தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகளை உலக நாடுகள் மேற்கொண்டிருக்கும் நிலையில் கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது வழமையாகும்.

இதற்கு முன்னரும் விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றிய கப்பல்கள் மற்றும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்திய குண்டு துளைக்காத வாகனங்கள் என்பன நீர்கொழும்பு கடற்பரப்பில் நீரில் முழ்கடிக்கப்பட்டுள்ளன. இவற்றை திருத்துவதற்கு அதிக செலவுகள் ஏற்படும் என்பதாலும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதும் வழமையானதாகும்.

சர்வதேச நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகவே இந்தச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஆழ்கடலில் இந்த கப்பல் மற்றும் வாகனங்கள் மூழ்கடிக்கப்பட்ட பகுதியில் அவை, சிப்பிகள் உட்பட கடல் வாழ் உயிரினங்களை ஈர்க்கும் செயற்பாடுகளுக்கு வழியேற்படுத்தும். அதேவேளை அந்தப் பகுதிகளை எதிர்காலத்தில் ஒரு சுற்றுலாப் பயணத்துக்கான இடமாக மாற்றுவதற்கும் வழியேற்படும்.

உலகளவில் 30 லட்சத்துக்கும் அதிகமான கப்பல்கள் விபத்துக்களின் காரணமாக கடலில் மூழ்கிக் கிடக்கின்றன என யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது. ஆனால் இன்று அவை பிரபலமான சுற்றுலாத் தளங்களாகவும் கடல் வளங்களை பாதுகாக்கும் செயன்முறைக்கும் வழிவகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 600 குடும்பங்கள் சுயதனிமை

யாழ். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணிய சுமார் 600 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று மாவட்ட அரச அதிபர் க.மகேசன் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் நேற்று மேலும் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர் ஏற்கனவே தனிமைப்படுத்தலில் இருந்தவர் என்று மாவட்ட அரச அதிபர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து தொற்றாளருடன் நேரடித் தொடர்புகளை பேணியுள்ளவர்களை தனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதாரப் தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, ஏற்கனவே தனிமைப் படுத்தப்பட்டிருந்தவர்கள் தற்போது பி.சி. ஆர். பரிசோதனையின் பின்னர் கட்டம் கட்டமாக தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இதன்படி தற்போது சுமார் 600 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலில் இருக் கின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

# ஒருவருடம் பூர்த்திசெய்த ஜனாதிபதி நாட்டுக்கு எதுவும் செய்யவில்லை!

## குற்றஞ்சாட்டுகிறார் சம்பிக்க

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று ஒருவருடம் பூர்த்தியாகும் நிலையில் நாட்டு மக்களுக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் அவர் நிறை வேற்ற வில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம் பிக்க ரணவக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத் தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியமைத்து ஒருவருடம் பூர்த்தியாகி விட்டது. ஆனால் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் இன்னமும் நிறைவேற்றவில்லை. தேசிய பாதுகாப்பு மற்றும் மத்தியவங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் நடவடிக்கை எடுப்ப தாகக் குறிப்பிட்டனர். மேலும் சுபீட்ச மான பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தனர். இது வரையில் அதில் எதனையாவது செய் துள்ளார்களா?

நல்லாட்சி அரசாங்கத்துக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் மற்றும் மத்திய வங்கி பிணைமுறி மோசடிதான் என்பனவே கொள்கை அடிப்படையில் காணப்படுகின்றன. ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது மத் திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர் ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவதாகக் கூறப்பட்டது.

ஆனால் பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய இலங்கையில் உள்ள சந்தேகநபர்களுக்கு எதிராகக் கூட இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்பு கொண்டவர்கள் ஆளும் தரப்பினருடனும் தொடர்பில் இருக்கின்றமையே இதற்குக் காரணமா கும். ஆளும் தரப்புக்கும் இந்தச் செயற் பாடுகளுடன் தொடர்புள்ளது என்று கூறு வதற்கு நாம் பின்வாங்க மாட்டோம்.

உயிர்த்த ஞாயிறு தினதொடர் குண்டுத் தாக்குதல் சம்பவம் எம் மீது சுமத்தப்பட்ட மற்றைய குற்றச்சாட்டாகும். இந்தத் தாக் குதல் தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. அந்த விசாரணைகள் அனைத்துமே ஒரு பகுதியில் மாத்திரமே இடம்பெற்று வருகின்றன. அதாவது வெளிநாட்டு புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெற்றும் தாக்குதலைத் தடுக்க முடியாமல் போனமை தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இது தொடர்பில் மாறுப்பட்ட கோணத் தில் எந்த விசாரணைகளும் முன்னெ டுக்கப்படவில்லை. இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிமை, 2017 ஆம் ஆண்டு காத்தான் குடியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டிருந்த போதிலும், அவரைக் கைது செய்திருக்க வில்லை. அவர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருந்தார்.

அவருக்கு அதற்காக உதவிவழங் கிய நபர்கள் யாவர்? இதேவேளை இவரு டன் தொடர்பைப் பேணிய ஆளும் தரப்பு



உறுப்பினர்கள் தொடர்பிலும் கூறப்படு கின்றது. அது தொடர்பில் விசாரணை களை மேற்கொள்ளலாம் தானே.

ஐ.எஸ். அமைப்பினருடன் இலங்கை யில் சிலர் தொடர்பு கொண்டுள்ளனர் எனவும், அவ்வாறான 45 நபர்கள் தொடர் பிலும் வெளிநாட்டு புலனாய்வுப்பிரிவு தகவல் வழங்கியிருந்தது. எனினும் அது தொடர்பில நடவடிக்கை எடுக்காதமைக் குக் காரணம் என்ன? இந்த விடயங்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்த வேண்டும்.

தௌஹித் ஜமாத் அமைப்பினர் ஒரு சில முடிவுகள் எடுப்பதற்கு எம்நாட்டு புலனாய்வு பிரிவினர் ஒத்துழைப்பு வழங் கினர் எனக் கூறப்படுகின்றது. இந்நிலை யில் ஓர் அமைப்பின் தலைவர் எப்போ தும் தான் முதலாவதாக முன்வந்து தனது உயிரைத் தியாகம் செய்வதில்லை.

இந்த தாக்குதல் தொடர்பில் சஹ்ரானை பிரதான நபராகக் குறிப்பிட்டாலும், அதற்கு பின்னால் இன்னுமொரு குழு செயற்பட லாம். அந்த மறைமுகமான சக்தி எது வென்று கண்டறியப்பட வேண்டும். இந் தச் செயற்பாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவல் ஒரு பாதகமாக அமை யாது அல்லவா?

நல்லாட்சி அரசாங்கத்தில் பொருளாதா ரம் வீழ்ச்சி அடைந்ததாகக் குறிப்பிட்டார் கள். அவர்களது ஆட்சியில் சுபீட்சமான பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டனர். ஆனால் எதிர் பார்த்ததையும் விட பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. வைரஸ் பரவல் தொடர்பிலும் அவ்வாறே தாங்கள் வைரஸ் பரவலை கட்டுப்படுத்தி யதாக, ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆனால், தற்போது நாடு பூராகவும் வைரஸ் பரவல் அதிகரித்துள்ளது. மெனிங் சந்தையை பேலியகொட பகுதி யில் காணப்படும் கட்டடம் ஒன்றுக்கு மாற்ற தீர்மானித்துள்ளனர். இந்நிலை யில் இந்த கட்டடத்தை அரசாங்கம் அமைத் ததாகவும் கூறிகின்றது.

இது 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட வேலைத்திட்டம். இந்நிலையில் அதனை எவ்வாறு இந்த அரசாங்கம் உருவாக்கியிருக்கும்? இதன்போது 1191 பேருக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த கட்ட தொகுதியை அவர்களிடமிருந்து பறித்துக்கொண்டுள்ளனர். அந்த அனைத்து கட்டத்தொகுதிகளும் உரியதரப்பினருக்கே வழங்கப்பட வேண்டும். –என்றார்;.

## கோப்பாய் துயிலுமில்லத்தில் சிரமதானம் முன்னணி - பொலிஸார் முறுகல் நிலை!



கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல சுற் றாடல் பகுதி யை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று சுத்தம் செய்தனர். இதன்போது சம்பவ இடத்துக்கு கோப்பாய் பொலிஸார் சென்று அதைத் தடுக்க முயன்ற போதும், முன்னணியினர் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தின் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள நிலையில், துயிலுமில் லத்துக்கு எதிரில் விவசாய காணியில் கடந்த சில வருடங்களாக அஞ்சலி நிகழ்வு நடந்து வருவது வழக்கம்.

அந்த பகுதியில் சிரமதானம் மேற்கொள்ளும் பணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஈடுபட்டனர். முன்னணியின் இரண்டு எம்.பிக்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் இருவரும் அங்கு பிரசன்னமாகியிருந் தனர்.

இந்த நிலையில் கோப்பாய் பொலிஸார் அங்கு வந்து சிரமதான பணிக்கு தடைவிதிக்க முயன்றனர். இதனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பிக் கும், பொலிஸாருக்குமிடையில் தர்க்கம் உருவானது. இதன்போது கஜேந்திரகுமார் எம்.பியை சிவில் உடையில் பொலிஸ்காரர் ஒருவர் காணொலி எடுக்க முனைந்தார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், அவரது ஆளடையாளத்தையும் கஜேந்திரகுமார் பரிசோதித்தார்.

சிரமதானத்தில் ஈடுபடுபவர்களின் பெயர் விவரத்தை பொலிஸார் பதிவு செய்ய முயன்றபோது, அதற்கும் முன்னணி எதிர்ப்பு தெரிவித்தது.

இறுதியில் பொலிஸார் அங்கிருந்த விலகிச் சென்றனர்.

## ஜனசா விவகாரம் ஜனாதிபதிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை!



## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எந்த விதமான ஆட்சேபனைகளும் இல்லை என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் கொரானா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்க விட யத்தில் சுகாதார தொழில்நுட்பக்குழுவிடத்திலேயே இறுதி முடிவு தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் களின் ஜனாஸா நல்லடக்கம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்க ளின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்கின்றமை தொடர்பாக இன்னமும் இறுதி முடிவொன்று எடுக்கப் படவில்லை. இந்த விடயத்தில் உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைந்துள்ள விதிமுறைகளுக்கு அமைவாகவும் முஸ்லிம்களின் பண்பாட்டு ரீதியான மற்றும் இஸ்லா மிய மத முறைப்படி ஜனஸாக்களை நல்லடக்கம் செய் வதற்கும் இடமளிக்க வேண்டும் என்றும் நாம் தொடர்ச் சியாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்டவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வந்திருந்தோம்.

அதனடிப்படையில் அமைச்சரவையிலும் இந்த விடயம் சம்பந்தமாகக் கவனத்தில் கொள்ளப்பட்டது. அமைச்சரவையில் ஜனாஸாக்களின் நல்லடக்கம் தொடர்பில் முஸ்லிம் மக்கள் முன்வைக்கும் நியாயமான கோரிக்கைகள் மற்றும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளில் காணப்படுகின்ற முன்னுதாரணங்கள் உள் ளிட்ட விடயங்கள் அனைத்தும் தெளிவுபடுத்தப்பட்டன.

இந்நிலையில் இந்த விடயத்தைக் கையாள்வதற்காக சுகாதார தொழில்நுட்பக் குழுவொன்றும் அமைக் கப்பட்டது. அந்தக் குழுவிடத்திலும் உரிய தெளிவு படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் ஜனாஸாக்களை புதைப்பதன் காரண மாக தொற்றுக்கள் பரவலாம் என்று அச்சம் வெளியி டப்படுகின்றது. அத்துடன் நிலத்தடி நீர் மாசுபற்றியும் கவனம் செலுத்தப்படுகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு முஸ்லிம்களின் அடிப்படைக் கோரிக் கைக்கு மதிப்பளித்து தீர்மானம் எடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தீர்வொன்றை நோக்கிய சிந்தனையை சுகாதார தொழில்நுட்ப குழு மேற்கொள்ளுமாக இருந் தால் இத்தனை இழுபறிகளும் ஏற்பட்டிருக்க வாய்ப் பில்லை.

துர்திஷ்டவசமாக சுகாதார தொழில்நுட்பக்குழு வானது தீர்வுகளை அடையாளம் காண்பதற்குப் பதி லாக ஜனாஸாக்களைத் தகனம் செய்வதற்கான கார ணங்களையே மென்மேலும் அடையாளம் கண்டு கொண்டிருக்கின்றது.

தற்போது நிலத்தடி நீர் தொடர்பான கரிசனையை அந்தக்குழு வெளிப்படுத்தியுள்ளது. ஹொலண்ட் போன்ற நாடுகள் கடல் மட்டத்திலிருந்து கணிசமாக கீழேயே இருக்கின்றன. அங்கு கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்கள் எவ்வாறு அடக்கம் செய்யப்படுகின் றார்கள் உள்ளிட்ட முன்மாதிரிகளைக் கவனத்தில் கொண்டு அந்தக் குழு இறுதி முடிவை எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மேலும் இந்த விடயத்தில் ஜனாதிபதியுடன் நான் பலதடவைகள் கலந்துரையாடியுள்ளேன். அவர் பக் கத்தில் எந்த விதமான ஆட்சேபனைகளும் இல்லை. அவ்வாறு இருக்கையில் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

குறிப்பாக முஸ்லிமக்களின் கலாசார பண்பாட்டு விடயங்களுக்கு எதிரானவராக ஜனாதிபதி சித்தி ரிக்கப்படுகின்றார். அது முற்றிலும் தவறானதொரு பார்வையாகும். ஜனாதிபதியின் மீது அரசியல் காரணங் களுக்காகவே குற்றசாட்டுக்களும் பொய்யான பிரசா ரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

முஸ்லிம் மக்கள் இந்த விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டைக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.– என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கருணா பற்றிய குற்றச்சாட்டுக்களை ராஜபக்ஷ அரசு விசாரிக்க வேண்டும்!

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் வலியுறுத்து



'கருணா அம்மான்' என்றழைக்கப்படும் முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மீது கிழக்கு மாகாண மக்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஜனாதிபதி - பிரதமர் தலைமையிலான ராஜபக்ஷ அரசு விசாரணை செய்ய வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு வில்லியம் ஆல்ட் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் கலந்துகொண்டிருந்தபோது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு அமைச்சரொருவர் வேலைவாய்ப்புக்கான விண்ணப்பத்துக்கு 20 ஆயிரம் ரூபா பணத்தை வாங்கி விட்டு வேலைவாய்ப்புக் கொடுத்துள்ளார் என்று கருணா அம்மானால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது.

அவரின் இந்தக் குற்றச்சாட்டு ஒரு வகையான பொறாமையின் வெளிப்பாடாகும். அவர் மக்கள் மத்தியில் பிரபல்யமானவர்களின் பெயரை உச்சரித்து தன்னைப் பிரபல்யமாகிக்கொள்ள வேண்டும் என நினைத்து செயற்படுபவர். இதனால் அவரின் கருத்துக்கள் தொடர்பாக நான் கண்டுகொள்வது இல்லை.

இதேவேளை, கருணா அம்மான் தொடர்பாக கிழக்கு மாவட்ட மக்களிடையே பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. இவை தொடர்பாக அரசு விசாரணைகளை நடத்த வேண்டும்.

என் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபித்தால் நான் அரசியலில் இருந்து விலகுவதற்குத் தயாராக இருக்கின்றேன். அதே போன்று அதனை நிரூபிக்க முடியாவிட்டால் கருணா அம்மான் அரசியலில் இருந்து விலக வேண்டும் - என்றார்.

## தீபாவளி நாளில் வடமராட்சியில் வன்முறைகள்; 18 பேர் படுகாயம்!

யாழ். வடமராட்சிப் பகுதியில் நேற்று தீபாவளித் திருநாளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் படுகாயமடைந்த 18 பேர் பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்தவர்கள் துன்னாலை, அல்வாய், பருத்தித்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

தீபாவளித் திருநாள் நேற்று யாழ். மாவட்டத்தில் இந்துக்களால் வழமைக்கு மாறாக ஒன்றுகூடல்களைத் தவிர்த்து அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது. எனினும், பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற வன்முறைகளால் பலர் படுகாயமடைந்துள்ளனர். வடமராட்சியில் மட்டும் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

## சுழிபுரம் இரட்டைக் கொலை; இதுவரை பன்னிருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ.16

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இரட்டைக் கொலைகள் தொடர்பாக 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சுழிபுரம் குடாக்கனை பகுதியில், இரண்டு குடும்பங்களுக்கிடையில் நிலவி வந்த பகைமையின் தொடர்ச்சியாக, வெள்ளி இரவு இரண்டு பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் வட்டுக்கோட்டைப் பொலிஸார், 12 பேரைக் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவத்துடன் 21 பேர் தொடர்புபட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் றோகண தெரிவித்துள்ளார்.

ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.






## பச்சிலைப்பள்ளிப் பகுதியில் ஒருவர் வெட்டிப் படுகொலை





கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத் திற்குட்பட்ட தம்பகாமம் ஊடாக மாமுனை செல்லும் வீதியில் செம்பியன்பற்று வடக்கு மாமமுனையை சேர்ந்த தனபாலசிங்கம் குலசிங்கம் என்பவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரனைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி – 1988.12.02<br>மதம் – இந்து A<br>நட்சத்திரம் – உத்திரம் 1<br>பாவம் – 09<br>செவ்வாய் – 12 இல்<br>கல்வி – AL<br>தொழில் – கனடியக் கம்பனியில்<br>எதிர்பார்ப்பு – படித்த அழகான பெண். | பிறந்த திகதி – 1995.09.04<br>மதம் – இந்து V<br>நட்சத்திரம் – மூலம்<br>பாவம் – 04<br>கல்வி – AL, Bsc வெளிவாரி<br>தொழில் – அரசாங்க உத்தியோகம்.<br>எதிர்பார்ப்பு – படித்த உத்தியோக மணமகன் தேவை. |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இளையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


## நல்லூரில் பக்திபூர்வமாக கந்த சஷ்டி







நல்லூர் கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டி உற்சவத்தின் முதலாம் நாள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. தற்போதைய கொவிட் 19, சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு, சுகாதார நடைமுறைகளுக்கமைய அழகிய இடப வாகனத்தில் முருகப் பெருமான் எழுந்தருளி, உள் வீதியுலா வந்தார். அரசாங்க அறிவுறுத்தல்களின் படி, ஆலயத்தினுள் அடியவர்கள் எவரும் அனுமதிக்கப்படாத போதிலும், கந்தசஷ்டி விரதகாரர்கள் பலர் சமூக இடைவெளிகளைப் பின்பற்றி வழிபாடியற்றயமையைக் காண முடிந்தது.
(படங்கள் : ஐ.சிவசாந்தன்)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

## கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
## இயற்கைக்கான தருணம்

# வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**விளம்பர அனுசரணை:-** காலைக்கதிர் Kalaikkathir